வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 30.09.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 285 | பக்கங்கள் : 16

# யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூற வைக்க உதவுங்கள்!

## அமெரிக்க வெளிவிவகார அமைச்சருக்கு எட்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் கடிதம்!

வாஷிங்டன், செப்ரெம்பர் 30

இலங்கையின் உள்நாட்டு மோதலின்போது யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என குற்றம்சாட்டப்படும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரின் குடும்பத்தினர் உட்பட அனைவரையும் விசாரணை செய்து பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் ஆதரவளிக்கவேண்டும் என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். 15

## “பயங்கரவாத பட்டியல்; புலிகளை நீக்கமுடியாது”

### மலேசிய நீதிமன்றம்

கோலாலம்பூர், செப். 30

தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் இருந்து நீக்கவேண்டும் என்று கோரிய மனுவை விசாரணை செய்யவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை, மலேசிய பிராந்திய நீதிமன்றம் நேற்று தள்ளுபடி 15

## அரசைக் கவிழ்க்கச் சதி; விசாரணைகள் ஆரம்பம்!

### பாதுகாப்பு வலயங்களை நிறுவ உயர்நீதிமன்றின் ஆலோசனை!

கொழும்பு, செப். 30

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சிகளில் ஈடுபடுமாறு போராட்டக்காரர்களை தூண்டிய சில அரசியல்வாதிகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த ஜூலை, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியை துறந்த 15

## போராடுவோரை ஒடுக்கவே புனர்வாழ்வு பணியக சட்டம்!

### சமூக செயல்பாட்டாளர்கள் எதிர்ப்பு

கொழும்பு, செப். 30

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் (செப். 23) சமர்ப்பிக்கப்பட்ட புனர்வாழ்வு பணியக சட்ட மூலத்தினூடாக போராட்ட செயல்பாட்டாளர்களை ஒடுக்குவதற்கு திட்டமிடப்படுகிறது என்று சிவில் அரசியல் செயல்பாட்டாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். 15

## இலங்கைக்கு கடன் வழங்க அங்கீகாரம் கிடைக்கவில்லை!

### சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 30

இலங்கைக்கு கடன் வழங்குவது தொடர்பில் பணிப்பாளர் சபை எப்போது அங்கீகாரம் வழங்கும் என நிச்சயமாகக் கூற முடியாது என்று சர்வதேச நாணய நிதியம் (ஐ. எம். எவ்.) தெரிவித்துள்ளது.

எனினும், கடன் வழங்குநர்களுடனான, கடன் மறுசீரமைப்பு பேச்சின் வெற்றியைப் பொறுத்து காலம் தீர்மானிக்கப்படும் என்று ஐ. எம். எவ்வின் பிரதிநிதி கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக் 15




## போதைப்பொருளை ஒழியுங்கள் அரச அதிபரிடம் 5 அம்ச கோரிக்கை!

### யாழ். போதனா மருத்துவமனை முன்வைப்பு

யாழ்ப்பாணம், செப். 30

போதைப் பொருளை ஒழிக்கக் கோரி ஐந்து அம்ச கோரிக்கைகள் அடங்கிய மனுவை யாழ். போதனா மருத்துவமனையினர் யாழ். மாவட்ட செயலரிடம் நேற்று கையளித்தனர். 15



## தேசிய பேரவை நேற்று கூடியது; உப குழுக்களை அமைக்க முடிவு!

கொழும்பு, செப். 30

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் இரு உப குழுக்களை அமைப்பதற்கு தேசிய பேரவை தீர்மானித்துள்ளது.

தேசிய பேரவையின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றது. பேரவையின் தலைவரும் சபாநாயகருமான மகிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப் 15

## கட்டுப்பாடுகளை தளர்த்த முடிவு!

கொழும்பு, செப். 30

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள பொருட்களின் இறக்குமதியை முன்னுரிமை அடிப்படையில் தளர்த்துவதற்கு அரசாங்கம் 15

## தொடர்புகளைத் துண்டித்து தனிமைப்படுத்தினார் பஸில்!

கொழும்பு, செப். 30

அமெரிக்கா சென்றுள்ள முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ இலங்கையுடனான அனைத்து தொடர்புகளையும் துண்டித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள் 15

## கண்காணிப்பு குழுக்களின் பதவிகளை எதிர்க்கட்சிகளுக்கு வழங்கவேண்டும்!

### தேசிய பேரவையில் எதிர்க்கட்சி வலியுறுத்து

கொழும்பு, செப். 30

பாராளுமன்றத்தில் கண்காணிப்பு குழுக்களின் முக்கிய பதவிகள் எதிர்கட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சி வலியுறுத்தியுள்ளது.

நேற்று நடந்த தேசிய பேரவையின் முதல் கூட்டத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதாக பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் சார்பில் லக்ஷ்மன் 15

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு காலத்தில் சட்டம் படித்தவர்கள் மட்டுமே தமிழர் அரசியலில் இடம்பெறலாம் என்பது எழுதப்படாத விதியாக இருந்தது.

அரசியலுக்கு வரவேண்டும் என்பதற்காகவே சட்டம் படித்தவர்கள்கூட அப்போது இருந்தார்கள்.

இதற்கு, பாராளுமன்றங்கள் சட்டங்களைத் தயாரிக்கின்ற இடமாக இருந்ததும் ஒரு காரணமாக இருக்கலாம்.

ஒரு சட்டத்தரணி என்றால், அவரிடம் ஒரு வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் என்று சென்றால், தான் ஒரு நீதிபதியாக இருந்து கேட்க வேண்டியவற்றை எல்லாம் நம்மிடம் கேட்டுத்தான் வழக்கை எடுத்து நடத்தலாமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பார்கள்.

இன்றும் நாங்கள் எமது அரசியலில் உள்ள ஒரு சட்டத் தரணியைப் பற்றியல்ல இரண்டு சட்டத்தரணிகளின் அண்மைக்கால நடவடிக்கைகள் பற்றி இந்தப் பத்தியில் பார்க்க இருக்கின்றோம்.

திலீபனின் நினைவேந்தலோடு அதிகம் பேசப்பட்டவர் ஒரு சட்டத்தரணி. அவர் திலீபனின் நினைவுதினம் பற்றி வெளியிட்ட விளக்கம் அவர் ஒரு சட்டத்தரணி தானா என்ற கேள்வியை எழுப்புவதை தவிர்க்க முடியாமல் இருந்தது.

நினைவுதினம் தொடர்பாக அது முடிந்ததும் அவர் வெளியிட்ட அறிக்கையில் விரிவான அறிக்கை ஒன்றை ஆதாரங்களுடன் எதிர்பாருங்கள் என்று அறிவித்திருந்தவர், மறுநாள் யாரோ பேசியதாக ஒவ்வொரு வரி ஓடியோ பதிவுகளை வெளியிட்டிருந்தார்.

ஒருவர் பிரதான தீபத்தை எடுக்க முயல்வதையும் அதுதொடர்பான இழுபறியையும் கொண்ட மற்றுமொரு சிறிய துண்டு வீடியோ பதிவும்கூடவே வெளியிடப்பட்டது.

அந்த வீடியோவில் அதற்கு முன்னர் என்ன நடந்தது என்பதையும் சொன்னால் - காட்டினால்தானே அந்த வீடியோ முழுமையாக இருக்கும் என்பது ஒரு சட்டத் தரணி அறியாததல்ல.

காவடி எடுத்து வந்தவர்கள் இறங்க முடியாத நிலையில் அந்தத் தீபம் வைக்கப்பட்டிருந்தது பற்றியும், அது முன்னணியினரால் வேண்டுமென்று அப்படி வைக்கப்பட்டிருந்ததாகவும் பல தரப்பினரும் புகார் தெரிவித்து வரும் நிலையில் அதனை அகற்ற முயன்றவரையே எல்லா வற்றுக்கும் காரணம் என்று சட்டத்தரணி நிரூபிக்க முயல்வது தமிழ் மக்கள் தலையில் பூச்சூடுவது போன்றது.

இன்னுமொரு சட்டத்தரணி, பழைய சம்பவம் ஒன்றை இப்போது நடக்கின்ற சம்பவங்களுக்காக அதனை ஞாபகப்படுத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அண்மையில் கொழும்பில உள்ள முக்கிய இடங்கள் சிலவற்றை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தியிருந்தார். அதனை பல்வேறு தரப்பினரும் கண்டித்து வருகின்றனர் என்பது வேறு சங்கதி.

ஆனால், அதற்காக முன்னர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டில் வடக்கில் தமிழர்களின் காணிகளை பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருந்தமையை கண்டித்து நடத்திய போராட்டத்தில் அவர் கலந்து கொண்டமை பற்றிய படங்களுடன் அதனையும் இதனையும் முடிச்சுப்போட்டு சுமந்திரன் தனது சமூக வலைத் தளம் ஒன்றில் எழுதியிருக்கின்றார்.

கொழும்பில், அதி முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அண்மையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டிருந்தனர். அந்தப் போராட்டம் எவ்வளவு நியாயமானதோ அதேபோல அந்த போராட்டக்காரர்கள் அத்துமீறி நடந்துகொண்டதும் தவறானதுதான். அத்தகைய இடங்களை உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தியமையை கண்டிக்க வேண்டியதும் நியாமானதுதான். ஆனால், அதற்காக தமிழர் நிலங்களை உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அடாத்தாக அபகரித்தமைக்கு எதிரான போராட்டத்துடன் இதனையும் ஒப்பிட்டுப் பார்த்தமையை புரிந்து கொள்ள முடியவில்லை.

தமிழர் நிலங்களை அபகரித்தமையையும் ஜனாதிபதி செயலகம் போன்ற இடங்களை அதியுயர் பாதுகாப்பு பகுதியாக பிரகடனப்படுத்துவதும் நமக்கு ஒன்றுதான் என்கிறாரோ?

- ஊர்க்குருவி

# ரூ. 30 கோடி மருந்து பொருட்களை வழங்குகிறது ஜெய்கா நிறுவனம்!

கொழும்பு, செப். 30

இலங்கை மருத்துவமனைகளுக்கு 30 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களை வழங்கவுள்ளதாக ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனம் (ஜெய்கா) தெரிவித்துள்ளது.

உயிர்காக்கும் மருந்துகள் இலங்கைக்கு விரைவாக பெற்றுக்கொடுக்கப்படும் என ஜெய்கா நிறுவனத்தின் இலங்கை அலுவலகத்தின் சிரேஷ்ட பிரதிநிதி (அவசர உதவிப் பிரிவு) டெட்சுயா யமடா தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் நெருக்கடி காரணமாக இலங்கை கடுமையான மருந்து பற்றாக்குறையை எதிர்கொள்கிறது. மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள் இல்லாததால் சில மருத்துவமனைகள் அறுவை சிகிச்சைகளை நிறுத்தி வைக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது என ஜப்பானிய உதவி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# விபத்தில் காயமடைந்தவர் 7 நாட்களின் பின் மரணம்!

கொழும்பு, செப். 30

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிளில் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவ மனையில் 7 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த இளைஞன்சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியை சேர்ந்த அன்ரன் தினுஜன் (வயது 21) எனும் இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

கோப்பாய் சந்திக்கு அருகில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வீதியோர கால் வாய்க்குள் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்ப் பாணம் போதனா வைத் திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியசாலையில் 7 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். (ஐ)

## இலங்கைக்கு 1.5. மில்லியன் யூரோ வழங்குகிறது ஐரோப்பிய ஒன்றியம்!

கொழும்பு, செப். 30

இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக 1.5 மில்லியன் யூரோக்களை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் உத்தேசித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் வகையில் இந்த உதவித் தொகையை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

உணவு, சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்பு போன்ற வற்றிற்காக இந்தப் பணம் வழங்கப்பட உள்ளதாகவும், மிகவும் பாதிக்கப்படக்கூடிய குடும்ப அலகுகளுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 30

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் அவர், குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவும் - மாதந்த நாயன்மார் குருபூஜை நிகழ்வு கனடாவின் ரொறன் ரோவில் வசிக்கும் சிவஸ்ரீ பால. திருகுணானந்த குருக்களின் அனுசரணையில் நடக்கிறது.

இந்த நிகழ்வின் வரிசையில், சமயஜோதி கதிர் காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் 40ஆவது சொற்பொழிவு தாவடி ஸ்ரீ சுழிபுரம் கிழக்கு பத்திரகாளி அம்பாள் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில், 'நாவலர் பெருமான் சைவத்தமிழ் உலகின் அடையாளம்' எனும் தொனிப்பொருளில் சைவப்புலவர் பொன். சந்திரவேல் சொற்பொழிவாற்றுவார். நிறைவில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் உர விநியோகத்தில் ஊழல்!

## கேள்வி எழுப்புகிறார் துரைரெத்தினம்

மட்டக்களப்பு, செப். 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயிகளுக்கான மானிய அடிப்படையிலான யூரியா உர விநியோகத்தில் ஊழல், மோசடிகள் நிலவுவதாக முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் (ஈ. பி. ஆர். எல். எவ். பத்மநாபா மன்றம்) கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்-

வேலியே பயிரை மேயும் வகையில், அரசு சார்ந்த ஒரு சில அரசியல்வாதிகள் கப்பம் பெற்று, மாவட்டத்திற்கு குறைந்த அளவில் மானிய உரத்தை அனுப்பவைத்து உரத்தட்டுப்பாடு ஏற்படும் வகையிலும், வியாபாரிகள் கொள்ளை இலாபமீட்டவும் வழிவகை செய்துள்ளதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்ணளவாக இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட விவசாயக் காணிகளில் மேட்டு நிலப் பயிர் செய்கை, வேளாண்மைச் செய்கை, செய்கை பண்ணப்பட்டு வருகின்றது.

இதில் மானிய அடிப்படையில் உரம் வழங்குவதற்காக விவசாயச் செய்கைக்கென ஒரு இலட்சத்தி முப்பத்தையாயிரம் ஏக்கரும், மானியம் அல்லாத அறுபதாயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கரும், விவசாயச் செய்கைக்கென பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

9500 மெற்றிக் தொன்னுக்கு மேற்பட்ட யூரியா உரம் மாவட்டத்திற்குத் தேவையான நிலையில் மானிய அடிப்படையிலும், ஏனைய மானியம் அல்லாத அடிப்படையிலும் யூரியா உரமும் தேவையாகும். ஆனால், அரசைப் பொறுத்தவரையில் மானிய அடிப்படையிலான உரத்தை குறைந்தளவில் மாவட்டத்திற்கு அனுப்பி உரத்தட்டுப்பாட்டை விவசாயிகளுக்கு ஏற்படுத்தி அரசுக்குள் உள்ள ஒரு சில அரசியல் வாதிகள் கப்பம் பெற்று மாவட்டத்திலுள்ள வியாபாரிகளும் குறிப்பிட்ட இலாபத்தை வைத்து அதிக விலையில் யூரியா உரத்தை விற்பதற்கான முயற்சியில் ஆரம்பித்துள்ளனர்.

இதனால், மாவட்டத்தில் அதிக விளைச்சல் பெறாத விவசாயக்காணி உரிமையாளர்களும், பணம் கொடுத்து வாங்க முடியாத விவசாயிகளும் நேரடியாக இதில் பாதிக்கப்படுவதோடு, வளம் உள்ள விவசாயிகளும் அதிக விலை கொடுத்து உரத்தைப் பெற்று இலாபம் இல்லாமல் நட்டம் அடையக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது -என்றுள்ளது.

(அ-06)

ஈழநாடு
Eelanadu
30.09.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழர்களின் எதிரிகள்?

ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுதான் தமிழ் மக்களின் முதன்மையான பிரச்னையாகும். அதிகாரமற்ற மக்களாக தமிழ் மக்கள் இருப்பதால்தான் அவர்களைச் சுற்றி இடம்பெறும் பல்வேறு விடயங்களில் அவர்களால் செல்வாக்கு செலுத்த முடியாமல் இருக்கின்றது. அதிகாரப் பகிர்வின்றி நல்லிணக்கம் என்பது எப்போதும் சாத்தியமற்ற ஒன்றாகும். ஆனாலும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஒன்றை அண்மைக்காலத்தில் பெறுவதற்கான சாதகமான அரசியல் சூழலும் இல்லை. நல்லாட்சி அரசாங்கம் என்றழைக்கப்பட்ட ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், அவ்வாறானதொரு வாய்ப்பு இருந்தது. ஆனாலும், புதிய அரசியல் யாப்பு என்னும் மாயமானுக்கு பின்னால் போனதால் இறுதியில் காலம் வீணாகியது.

இவ்வாறானதொரு பின்புலத்தில், மாகாண சபை முறைமையை உச்ச அளவில் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்னும் வாதம் பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. தமிழர் பிரச்னையில் இந்தியா அதனை ஒரு கொள்கை நிலைப்பாடாகவே வைத்திருக்கின்றது. இந்தியாவின் தலையீட்டின் காரணமாகவே பல்வேறு சிங்கள அடிப்படைவாத தரப்புக்கள் எதிர்த்து வருகின்றபோதிலும்கூட, இன்றுவரையில் 13ஆவது திருத்தச்சட்டம் நிலைத்து நிற்கின்றது. ஏனெனில், 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றிலுமாக இல்லாதொழிக்க முற்பட்டால் இந்தியாவின் தலையீட்டை எதிர்கொள்ள நேரிடும் என்பதால்தான் கடந்த 35 வருடங்களாக பலவாறான சிங்கள குறுக்கீடுகளுக்கு மத்தியிலும் 13ஆவது திருத்தச் சட்டம் நிலைத்து நிற்கின்றது.

13ஆவது திருத்தச் சட்டம் இறுதித் தீர்வில்லை என்று கூறினாலும்கூட, அதனைத் தாண்டிச் செல்வதற்கான வழிமுறைகள் தொடர்பில் எவராலும் கூறமுடியவில்லை. ஈழத் தமிழர் விவகாரம் தொடர்பில் பேசப்படும் சந்தர்ப்பங்கள் அனைத்திலும், இந்தியாவின் அறிவிக்கப்பட்ட கொள்கை நிலைப்பாடாக 13ஆவது திருத்தச் சட்டமே இருக்கின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தாண்டிச் செல்வதை இந்தியா எதிர்க்கவில்லை. ஆனால், இந்தியாவின் நிலைப்பாடாக அது மட்டுமே இருக்கின்றது. அப்படித்தான் இருக்கவும் முடியும். ஏனெனில், அதுவே இந்தியாவால் கொண்டுவரப்பட்ட விடயம். ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், இந்தியாவின் ஆதரவின்றி புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவர முடியுமென்னும் நம்பிக்கையோடுதான் சம்பந்தன் செயல்பட்டிருந்தார். ஆனால், அது சாத்தியப்படவில்லை. அதிலிருந்தாவது தமிழ்த் தேசிய தரப்புக்கள் விடயங்களை கற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், அதுவும் நடக்கவில்லை. அது நடந்திருந்தால் இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதும் விடயத்தில் தேவையற்ற சலசலப்புக்கள் இடம்பெற்றிருக்காது.

தமிழ் மக்களின் பிரச்னையை கையாள்வதற்கான பக்குவமான அணுகுமுறைகள் தொடர்பில் சிந்திக்க வேண்டிய காலத்தில் தமிழ்த் தேசியம் என்னும் பெயரில் இடம்பெறும் விடயங்களை அவதானித்தால் கவலையளிக்கின்றன. தமிழ் மக்களின் பிரதான பிரச்னைகளை மடைமாற்றும் நோக்கோடுதான் சிலர் திட்டமிட்டு இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுக்கின்றனரா - என்னும் கேள்வி எழுகின்றது. அண்மையில் திலீபனின் நினைவு தினத்தின்போது இடம்பெற்ற சம்பவங்கள் தமிழ் மக்களின் அரசியலை சீரழிப்பதற்கு வெளியிலிருந்து எவரும் வரவேண்டியதில்லை என்னும் நிலைமையே எடுத்துரைக்கின்றது. ஒருபுறம் தற்போதுள்ள சூழலில் ஓரணியாக நிற்கும் முயற்சிகள் குழப்பப்படுகின்றன. இன்னொரு புறம் இவ்வாறான அரசியல் ஒழுங்கீனங்கள் இடம்பெறுகின்றன. இதிலுள்ள ஆபத்தான விடயம் என்னவென்றால் இவ்வாறான விடயங்கள் அனைத்தும் தமிழ்த் தேசியத்தின் பெயரால்தான் இடம்பெறுகின்றன. உண்மையில் இப்போது தமிழ் மக்களின் எதிரிகளை வெளியில் தேடவேண்டியதில்லைபோலும். வெளியிலுள்ள எதிரிகளால் பிரச்னையில்லை. ஏனெனில் அவர்கள் எதிரிகள் என்பதை எல்லோருமே அறியலாம்.

# வன்முறைகளை தடுக்க தவறிய பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம்!

*கொழும்பு, செப். 30*

*23 பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் பொலிஸ் பொறுப்பதிகாரி கடமையில் இருந்து நீக்கப்பட்டு வேறு சாதாரண பொலிஸ் கடமைகள் தொடர்பில் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவ கூறினார்.*

*பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*எவ்வாறாயினும் இந்த 23 பொலிஸ் பொறுப்பதிகாரிகளும், கடந்த மே மாதம் 9 ஆம் திகதியும் அதனை அண்மித்தும் நாட்டில் பதிவான வன்முறைகளின்போது, அரசியல் வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்களை தடுக்கத் தவறியமையை மையப்படுத்தி இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.*

*இதன்படி உயிலங்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி எச். ஜே. முத்தட்டுதென்ன களனி வலயத்தின் சாதாரண கடமைகளுக்காக இடமாற்றப்பட்டுள்ளார்.*

## தந்தையை கொன்று தீயிட்ட மகன் கைது!

*கொழும்பு, செப். 30*

*தந்தையை மண்வெட்டியால் தாக்கியதுடன் அவரை கத்தியால் வெட்டி கொலை செய்த மகனை மாலபே பொலிஸார் கைது செய்துள்ளனர்.*

*கொழும்பு, - ஹோகந்தர வித்யாராஜ மாவத்தையில் வீடொன்றில் இந்த சம்பவம் நடந்தது.*

*தந்தையை கொன்ற பின்னர், சடலத்துக்கு தீ வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். ரஞ்சித் சேனாரத்ன என்ற 57 வயதான முச்சக்கர வண்டி சாரதியே இவ்வாறு கொல்லப்பட்டார்.*

*போதைப்பொருளுக்கு அடிமையாகி புனர்வாழ்வு பெற்ற மகனை அண்மையில் தாய் வீட்டுக்கு அழைத்து வந்துள்ளார்.*

*இருவருக்கும. இடையில் தகராறு அதிகரித்ததை தொடர்ந்து இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான 28 வயதுடைய மகனைக் கைது செய்ய மாலபே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)*

## கெஹலியவுக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்!

*கொழும்பு, செப். 30*

*அரசாங்கத்துக்கு நட்டத்தை ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் இருவருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

*குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்ட பின்னர் அமைச்சர் மற்றும் பிரதிவாதிகள் இருவரையும் பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*இதன்படி, இந்த வழக்கு நவம்பர் 3ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வருகிறது.*

## சிறுவர் தினமும் வாணி விழாவும்

*யாழ்ப்பாணம், செப். 30*

*சிறுவர் தினம் மற்றும் நவராத்திரி காலத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு - காலையடி மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளி மழலையருடன் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயம் மற்றும் பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை ஆகியவற்றின் மாணாக்கரும் இணைந்து நடத்தும் கலை விழா நாளை சனிக்கிழமை பி.ப. 4 மணிய ளவில் மறுமலர்ச்சி மன்றத்தின் உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.*

*ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளரும், மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான சு. சுந்தரசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவின் விசேட நிகழ்வுகளாக செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் "எங்கே போனார் எலியார்?" மற்றும் மறுமலர்ச்சி மன்ற சிறுவர்களின் "புத்தகப்பை" ஆகிய நாடகங்கள் ஆற்றுகை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*அனைவரையும் இந்த விழாவில் கலந்து கொள்ளுமாறு மறுமலர்ச்சி மன்றத்தினர் அழைத்துள்ளனர். (ஐ)*

## கருத்தரங்கு

*கொழும்பு, செப். 30*

*கொழும்பு மாவட்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் 'இலங்கைப் பொருளாதார நெருக்கடியும், அரச ஒடுக்குமுறையின் மத்தியில் முன்னோக்கிச் செல்வதற்கான பாதையும்' என்ற தலைப்பிலான பகிரங்க கருத்தரங்கம் எதிர்வரும் நாளை சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வெள்ளவத்தை, உருத்திரா மாவத்தையில் அமைந்துள்ள கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.*

*பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கத்தில் விசேட கருத்துரைகளை காலிமுகத்திடல் போராட்டக் களத்தின் முன்னணிச் செயல்பாட்டாளர்களான வண. பிதா. ஜீவந்த பீரிஸ், சட்டத்தரணி சுவஸ்திகா அருலிங்கம், தோழர் தனுஷ பத்திரண ஆகியோர் ஆற்றவுள்ளனர்.*

*இதில், அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 30 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - புரட்டாதி 13
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பஞ்சமி




**மேடம்**
நீண்டநாள் முயற்சி நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.தம்பதிக்குள் ஏற்பட்ட பிரச்னை விலகும். ஒருவரை ஒருவர் புரிந்து செயல்படுவீர்கள். புதிய நண்பர்களிடம் ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**இடபம்**
சொத்து விவகாரத்தில் ஏற்பட்ட பிரச்னை இன்று முடிவிற்கு வரும். குழந்தை பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். எதிர்பார்ப்பு நிறைவேறும். பழைய வழக்கு ஒன்று உங்களுக்கு சாதகமாகும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த வருவாய் வரும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட சிக்கல் தீரும். பணியாளர் ஆதரவுடன் வியாபாரத்தை விருத்தி செய்வீர்கள். வருமானம் கூடும். முயற்சியில் இருந்த தடை விலகும்.

**கடகம்**
முயற்சியில் சில தடைகள் ஏற்படும். குரு அருளால் சிந்தித்து செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வியாபாரத்தில் போட்டியை சந்தித்தாலும் உங்கள் அணுகுமுறையால் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்**
துணிச்சலுடன் செயல்பட்டு லாபம் காண்பீர்கள். எண்ணம் நிறைவேறும். நினைத்ததை சாதிப்பீர்கள். மற்றவரால் செய்ய முடியாத செயலை உங்கள் அணுகுமுறையால் செய்து முடிப்பீர்கள்.

**கன்னி**
திருமணத்திற்கு வரன் தேடி வந்தவர்களுக்கு எதிர்பார்த்த தகவல் வரும். வங்கியில் விண்ணப்பித்த கடன் வந்து சேரும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும்.

**துலாம்**
உங்கள் கவனக்குறைவால் முயற்சி நிறைவேறாமல் போகும். நிதானம் தேவை. செயல்களில் தடுமாற்றம் அடைவீர்கள். எதிர்பார்த்த ஒன்றில் தாமதம் ஏற்படும். விலகிச் சென்றவர்கள் உங்களைத் தேடி வருவர்.

**விருட்சிகம்**
வரவு அதிகரிக்கும் என்றாலும் திடீர் செலவால் சங்கடம் அடைவீர்கள். உழைப்பின் வழியே உங்கள் செயல்களில் சாதக நிலை காண்பீர்கள். புதிய வாகனம் வாங்குவீர்கள். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**தனுசு**
எதிர்பார்த்த பணம் வரும். பழைய கடன்களை அடைப்பீர்கள். தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். அலுவலகத்தில் ஏற்பட்ட நெருக்கடியை விடாமுயற்சியால் சரிசெய்வீர்கள்.

**மகரம்**
வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு எதிர்பார்த்த வாய்ப்பு தேடி வரும். தொழிலை விரிவு செய்வதற்காக எதிர்பார்த்த தொகை கைக்கு வந்து சேரும். உங்கள் அணுகுமுறையால் எதிர்பார்த்ததை அடைவீர்கள்.

**கும்பம்**
முயற்சி ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சியான நிலை ஏற்படும். செயலில் சிரமம் ஏற்பட்டாலும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வரவு கூடும். வரவேண்டிய பணம் இன்று வந்து சேரும்.

**மீனம்**
புதிய முயற்சி இன்று வேண்டாம். செயல்கள் தாமதமாகும். எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளிலும் கவனம் தேவை. பணியாளர்கள் நெருக்கடிக்கு ஆளாவர்.

# ஆர். எஸ். எஸ், சிறுத்தைகள் கட்சியின் போராட்டங்களுக்கு அனுமதி மறுப்பு!

சென்னை, செப். 30

தமிழகம் முழுவதும் ஆர். எஸ். எஸ். ஊர்வலம், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மனித சங்கிலி போராட்டங்களுக்கு பொலிஸ் அனுமதி மறுத்துள்ளது.

தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் எதிர்வரும் 2ஆம் திகதி நடக்கவுள்ள ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்துக்கு பொலிஸ் அனுமதி மறுத்துள்ளது. சட்டம் - ஒழுங்கு பிரச்னை காரணமாக ஊர்வலத்துக்கு அனுமதி அளிக்க முடியாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒக்ரோபர் 2ஆம் திகதி சமூக ஒற்றுமை நல்லிணக்க மனித சங்கிலி பேரணி நடத்தப் போவதாக திருமாவளவன் அறிவித்திருந்தார்.

ஒக்ரோபர் 2ஆம் திகதி வேறு சில அமைப்புகளும் தமிழகம் தழுவிய சமூக ஒற்றுமை நல்லிணக்க மனித சங்கிலி பேரணி நடத்த அனுமதி கோரியதால் சட்டம் ஒழுங்கு கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்ரோபர் 2ஆம் திகதி சட்டம் - ஒழுங்கு பிரச்னை ஏற்படும் என்பதால் ஊர்வலத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 50 இடங்களில் அன்றைய தினம் ஆர். எஸ். எஸ். ஊர்வலம் நடத்த பொலிஸ் அனுமதி மறுத்துள்ளது.

(ஐ)

# தி. மு. க.வின் பொதுக்கூட்டம் கனிமொழியும் போட்டியிடுவார்!

சென்னை, செப். 30

தி. மு. க., பொதுக்குழு, அடுத்த மாதம் 9ஆம் திகதி சென்னையில் கூடுகிறது. அதில், முதல்வர் ஸ்டாலின் மீண்டும் தி. மு. க., தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகி றார்.

தி. மு. க., உட்கட்சி தேர்தல் இறுதி வடிவம் பெற்றுள்ளது. கிளை, பேரூர், ஒன்றிய, நகர, மாநகர், மாவட்ட நிர்வாகிகள் தேர்தல் முடிவடைந்து, புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். ஓரிரு நாளில், மாவட்ட செயலர்கள் தேர்வு பட்டியல் வெளியாக உள்ளது.

மாவட்ட செயலர் பதவிக்கு கட்சியில் கடும் போட்டி இருந்தபோதிலும், பெரிய அளவில் மாற்றம் செய்ய, கட்சி தலைமை விரும்பவில்லை. ஓரிருவரை தவிர, மற்ற அனைவரும் பதவியில் நீடிக்கும் வகையில், பட்டியல் தயாராகி வருகிறது.

இதற்கிடையில், கட்சியின் தலைமை அமைப்பான பொதுக் குழுவை கூட்டுவதற்கான அறிவிப்பை, விதிப்படி, 7 நாட்களுக்கு முன்ன தாக வெளியிட வேண்டும். அதன் அடிப்படையில் பொதுக்குழு அறிவிப்பை, அக்கட்சி பொதுச் செயலர் துரைமுருகன் நேற்று வெளியிட்டார்.

தி.மு.க., துணைப் பொதுச் செயலர் பதவியை, முன்னாள் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் இராஜிநாமா செய்துள்ளார். அந்த பதவி தற்போது வெறுமையாகி உள்ளது. பொதுக்குழுக் கூட்டத்தில், புதிய துணைப் பொதுச் செயலராக, கனிமொழி தேர்வு செய்யப்பட உள்ளார் என்று கூறப்படுகிறது. பொதுக்குழுக் கூட்டத் தில், சட்ட சபைத் தேர்தல் தொடர்பாகவும், தி.மு.க., கூட்டணியில் கூடுதலாக எந்தெந்த கட்சிகளை சேர்க்கலாம் என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது. (ஐ)

# திருச்செந்தூர் ஆலயத்தில் ரூ. 300 கோடியில் திருப்பணி!



சென்னை, செப். 30

உலகப் பிரசித்தி பெற்ற திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 300 கோடி (இந்திய) ரூபாயில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுப் பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி வழியாக புதன்கிழமை அவர் அந்தப் பணிகளை தொடங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின் போது, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ரூ.150 கோடியில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, முழுமையான திருப்பணிகள் மற்றும் இதர பணிகளைச் செயல்படுத்த வரைவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

திருக்கோயில் நிதி மூலமாக ரூ.100 கோடியில் பக்தர்களுக்கு தங்கும் விடுதிகள், சலவைக் கூடம், சுகாதார வளாகம், பேருந்து நிலையம், திருமண மண்டபங்கள், பஞ்சாமிர்தம், விபூதி தயாரிப்புக் கட்டடம், கடல் அரிப்பைத் தடுக்கும் வகையில் பாதுகாப்பு தடுப்புச் சுவர் ஆகிய பணிகளைச் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது. மொத்தமாக ரூ.300 கோடியில் கோயில் பணிகள், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பணிகளை தலைமைச் செயலகத்தில் இருந்து புதன்கிழமை காணொலிக் காட்சி வழியாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கிவைத்தார்.

# அ. தி. மு. க. கட்சிக்கே திராவிட மொடல் உரிமை!

## எடப்பாடி பழனிசாமி



மதுரை, செப். 30

திராவிட மொடலுக்கு சொந்தக்கார கட்சி அ. தி. மு. க.வே. அதனை உருவாக்கியது அ. தி.மு.க தான் என்று கூறியுள்ளார் எடப்பாடி பழனிசாமி.

அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலாளர் பதவியேற்ற பிறகு முதன்முறையாக விருதுநகர் மாவட்டத்துக்கு பழனிசாமி சென்றார். அங்கு அவருக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மின் கட்டண உயர்வுக்கு தி. மு. க. அரசை கண்டித்து சிவகாசியில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். இதன் போது, அ. தி. மு. க. தமிழகத்தில் 32 காலம் ஆட்சி செய்திருக்கிறது. தமிழகம் இந்தியாவில் முதன்மை மாநிலம் என சொல்வதற்கு அடித்தளமிட்டது அ. தி. மு. க. திராவிட மொடல் திராவிட மொடல் என மூச்சுக்கு 300 தடவை ஸ்டாலின் சொல்கிறார். அப்படி என்ன திராவிட மொடல் ஆட்சி செய்கிறீர்கள்? திராவிட மொடலுக்கு சொந்தக்கார கட்சி அதிமுக. திராவிட மொடலை உருவாக்கியதே அ. தி. மு. கதான் - என்றார். (ஐ)

# உணவுப் பாதுகாப்பு நெருக்கடி அதிகரிப்பு

## பத்தில் நான்கு குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, செப். 30

இலங்கையில் ஒவ்வொரு பத்தில் நான்கு குடும்பங்கள் போதியளவு உணவு உட்கொள்வதில்லை என உலக உணவுத் திட்டத்தின் அண்மைய அறிக்கையொன்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் பொருளாதார நெருக்கடியானது நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கு தொடர்ந்து அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாகவும், உணவு மற்றும் எரிபொருள் விலையேற்றம் காரணமாக மக்கள் உணவு உண்பதை விட்டு விலகிச் செல்வதாகவும் இந்தத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்காலத்தில் இந்த நாட்டின் நிலைமை இன்னும் மோசமாகலாம் என உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

இலங்கையர்கள் ஆபத்தான உணவுப்பழக்கத்தில் உள்ளனர் என்பதை வலியுறுத்தும் உலக உணவுத் திட்டம், நாடு முழுவதும் உணவுப் பொருட்களின் விலை உயர்வால், பல மக்கள் குறைவான, மாற்று உணவு வகைகளை உட்கொள்ள முனைகின்றனர் என்றும் தெரிவித்துள்ளது. (அ)

# 22ஐ விவாதத்துக்கு எடுக்க நாள் நிர்ணயம்

கொழும்பு, செப். 30

அரசியலமைப்பிற்கான 22 ஆவது திருத்தச்சட்டமூலம் மீது பாராளுமன்றத்தில் எதிர் வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் விவாதம் நடைபெறவுள்ளது.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான குழுக்கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று முற்பகல் நடை பெற்றது. இதன்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று எதி ரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். (அ)

# 33 பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம்

கொழும்பு, செப். 30

நாடு முழுவதும் கடந்த மே மாதம் 9ஆம் திகதி ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப்படுத்த தவறிய 33 பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 33 பொலிஸ் பொறுப்பதிகாரிகள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பொறுப்பதிகாரிகள் வெவ்வேறு பொலிஸ் நிலையங்களில் வேறு கடமைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவா தெரிவித்தார்.

அதன்படி, காலி, குருநாகல், குளியாப்பிட்டிய, உயிலங்குளம், அனுராதபுரம், மிஹிந்தலை, மின்னேரிய, வாரியபொல, தங்கொடுவ, ஹெட்டிபொல மற்றும் நாரம்மல உள்ளிட்ட 33 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளே சாதாரண கடமைகளுக்காக வேறு பொலிஸ் நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணில் அரசின் ஆயுள் முடிவடையப்போகிறது!

## மைத்திரிபால எச்சரிக்கை

**கொழும்பு, செப். 30**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் ஆயுள் விரைவில் முடிவடையபோகின்றது - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

இந்த அரசாங்கத்துக்கு மக்கள் ஆதரவு இல்லை. அதன் ஆயுள் விரைவில் முடி



யப்போகின்றது. தேர்தல் ஒன்றின் ஊடாகவே ஆயுள் முடிவுக்கு கொண்டுவரப்படும். தற்போதைய அரசாங்கத்துக்கு நிலையான பயணம் இல்லை என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதே வழியில் பயணித்தால் தேசிய உற்பத்தில் முழுமையாக இல்லாமல் போகும். போராட்டம் வேறு வடிவில் வெடிக்கும். மாணவர்கள்கூட வீதிக்கு இறங்குவார்கள்-என்றார். (அ)

# மன்னார் சர்வோதயத்தில் ஊழல் சகல ஊழியர்களும் பதவி விலகல்!

மன்னார், செப். 30

மன்னார் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான சர்வோதய நிறுவனத்தில் பணியாற்றும் நான்கு ஊழியர்களும் மன்னார் சர்வோதயத்தில் இடம்பெறும் பல்வேறு ஊழல் செயற்பாடுகளை முன்னிறுத்தி பதவி விலகியுள்ளனர்.

இலங்கையில் செயற்பட்டு வரும் மிகப்பெரிய அரச சார்பற்ற தொண்டு நிறுவனமான சர்வோதயம் மன்னார் சர்வோதயத்தின் ஊடாக மாவட்ட ரீதியில் பல செயற்திட்டங்கள் முன்னெடுத்து வருகின்ற நிலையில் அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளை மன்னார் சர்வோதய மாவட்டப் பணிப்பாளர் ஒழுங்கான முறையில் விடுவிப்பதில்லை என சக ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் தொண்டு நிறுவனங்களால் வறிய குடும்பங்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவிகளைக்கூட ஒழுங்காக வழங்குவதில்லை எனவும் இது தொடர்பாக பணியாற்றும் ஊழியர்கள் கேள்வி எழுப்புகின்றபோது முன்னுக்கு பின் முரணான கருத்துக்கள் தெரிவிப்பதாகவும் அதே நேரம் பழிவாங்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதாகவும் உத்தியோகத்தர்களுக்குள் முரண்பாடுகளை தோற்றுவித்ததாகவும் தெரிவித்து அனைத்து ஊழியர்களும் பதவி விலகி உள்ளனர்.

மேலும் தொடர்ந்து பிழைகளை சுட்டிக்காட்டும் ஊழியர்களை பழிவாங்குவங்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதாகவும் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கி விரிவான கடிதம் ஒன்றை சர்வோதய நிறுவனத்தின் தேசிய காரியாலயத்துக்கு அனுப்பி வைத்துள்ளதுடன் மாவட்ட காரியாலயத்தில் பதவி விலகல் கடிதங்களையும் கையளித்துள்ளனர். (அ)

# திலீபனின் தூபியை அன்று படையினர் அழித்தனர் எஞ்சிய நினைவுகளை இன்று நாமே அழிக்கிறோம்

## ஐங்கரநேசன் ஆதங்கம்

யாழ்ப்பாணம், செப். 30

திலீபனின் நினைவேந்தலில் ஏற்பட்ட குழப்பங்களும் அதையொட்டிய ஊடகச் சந்திப்புகளும் பேரினவாதிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. ஆனால், தமிழ் மக்கள் இவற்றால் வெட்கித் தலை குனிந்துள்ளார்கள். திலீபனின் தூபியை அன்று படையினர் அழித்தார்கள். அவர்களால் மக்கள் மனங்களிலிருந்து நினைவுகளை அழிக்க முடியவில்லை. ஆனால், எஞ்சிய நினைவுகளை இன்று நாமே அழிக்கிறோம் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தியாக திலீபன் நினை வேந்தல் குழப்பங்கள் தொடர் பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களை ஈந்தவர்கள் எந்நாளும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள். இது வெறுமனே நினைவுகளை மனத்திரையில் மீட்கும் சடங்குகள் அல்ல. மாறாக, அவர்களின் போராட்ட நியாயங்களையும் போராட்டத் தியாகங்களையும் அடுத்த தலைமுறைகளுக்குக் கடத்துகின்ற உயிர்ப்பான அரசியற் செயற்பாடுகளுமாகும்.

அரசியற் காரணங்களுக்காகப் போராடி மடிந்தவர்களின் நினைவேந்தல்களில் அரசியல் நீக்கம் செய்வது அவர்களின் போராட்ட நியாயங்களைக் குழிதோண்டிப் புதைப்பதாகும். இத்தகைய நினைவேந்தல்களில் இனத்துவ அரசியலைத் தாண்டிக் கட்சி அரசியல் மேலோங்குவது போராட்டத் தியாகங்களைச் சூறையாடுவதாகும். ஆனால், துரதிர்ஷ்டமாகத் தமிழ்த் தேசிய அரசியற் களத்தில் இன்று இவையே அதிகம் நிகழ்ந்தேறுகின்றன.



நினைவேந்தல் குழப்பங்களுக்கு யார் காரணம் என்ற கேள்விக்கும் அப்பால் இவை நிகழ்ந்திருக்கவே கூடாது என்பதுதான் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களினதும் வேதனைக் குரலாக உள்ளது. கட்சி வேறுபாடுகள் தாண்டிப் பேரினவாதிகள் ஒன்றுபட்டு நினைவேந்தியவர்களைக் கைதுசெய்யுமாறு கொக்கரிக்கிறார்கள். ஆனால், நாமோ பொது நினைவேந்தல்கவிற்கூட ஒன்றுபட முடியாமல் தமிழ்த்தேசியத்தை மழுங்கடித்து வருகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (அ)




## 80 கொக்கெய்ன் உருண்டைகளை விழுங்கி இலங்கை வந்த உகண்டா பிரஜை கைது!

கொழும்பு, செப். 30

ஐந்து கோடி ரூபா பெறுமதியான கொக்கெய்ன் உருண்டைகளை விழுங்கிய நிலையில் நாட்டுக்கு வந்த உகண்டா பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

43 வயதான சந்தேகநபர் சுமார் 80 கொக்கெய்ன் உருண்டைகளை விழுங்கியிருந்த நிலையில், உடலிலிருந்து இதுவரை 17 கொக்கெய்ன் உருண்டைகள் அகற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

## கோதுமை மாவின் விலை மேலும் அதிகரிக்கலாம்?

கொழும்பு, செப். 30

எதிர்காலத்தில் கோதுமை மாவின் விலை மேலும் அதிகரிக்கலாம் என உணவக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சந்தையில் தற்போது மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக மாவின் விலை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது சந்தையில் ஒரு கிலோ மா 410 முதல் 420 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

மாவின் விலை அதிகரிப்பு காரணமாக சில உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், மாவுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறை மற்றும் மாவின் விலை அதிகரிப்பு என்பன காரணமாக இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பேக்கரிகள் மூடப்பட்டுள்ளன. (அ)

## பாராளுமன்றை கலைக்கும் அதிகாரம் மார்ச் 26இன் பின்னர் ஜனாதிபதியிடம்

### மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு



**கொழும்பு, செப். 30**

**எதிர்வரும் மார்ச் மாதம் 26ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் உள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும் என அதிகாரிகள் அறிவித்தால், கட்டாயம் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்கவேண்டும்.

ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தை கலைப்பதற்கு இன்னும் அதிகாரம் இல்லை.

எனினும் பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான யோசனை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டால் அதனை நடத்துவதற்கு தேர் தல்கள் ஆணைக்குழு தயாராக இருக்கவேண்டும்.

நவம்பர் மாத நடுப்பகுதியின் பின்னர் தேர்தல் அறிவிக்கப்படும் பட்சத்தில் 2022ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலை பயன்படுத்தும் வாய்ப்புகள் உள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய கூறினார். (அ)

## யாழ்.போதனாவில் தொடர் திருட்டுகள் 23 கைபேசிகளுடன் ஒருவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், செப். 30

யாழ்.போதனா மருத்துவமனையில் தொடர் கைபேசித் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ். பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் நாவற்குழியைச் சேர்ந்த 23 வயதுடையவர் என்றும், அவரிடம் இருந்து 23 கைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திருடப்பட்டவை என்று கூறப்படுகின்றது.

சந்தேகநபர் மருத்துவமனை விடுதியில் தங்கியுள்ளவர்கள் மற்றும் மருத்துவமனைக்குச் வருவோரிடம் இருந்து கைபேசிகளைத் திருடுவதை வழக்கமாகக் கொண்டவர் என்று கூறப்படுகின்றது.

பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

மருத்துவமனையில் கைபேசிகளைப் பறிகொடுத்தவர்கள், தங்கள் கைபேசிகளை அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.(அ)

### போதைப் பொருட்கள் கடத்தல் குற்றச்சாட்டு:

## 6 இலங்கையருக்கு கேரளா நீதிமன்றம் பிணை மறுப்பு

புதுடில்லி, செப். 30

சுமார் 250 கிலோ போதைப் பொருட்கள் கடத்துவதில் ஈடுபட்டிருந்ததாக சந்தேகிக்கப்படும் 6 இலங்கை மீனவர்களுக்கு பிணை வழங்க இந்தியாவின் கேரள மாநில உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

அவர்கள் இலங்கையர்கள் என்பதால், பிணை வழங்கப்படும் பட்சத்தில் அவர்கள் தலைமறைவாவதற்கு சாத்தியங்கள் உள்ளன, எனவே அவர்களை வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் நிறுத்த முடியாமல் போகலாம் என்பதால் பிணை மறுக்கப்படுவதாக கேரள மாநில உயர்நீதிமன்ற நீதிபதி விஜ ஆபிரஹாம் தனது உத்தரவில் கூறினார்.

தொடுவாவவைச் சேர்ந்த சுனில் குரேரா மற்றும் ரணில் ஜெயந்த பெர்ணாண்டோ, கண்டியைச் சேர்ந்த சாமிக கமகே தேசப்பிரிய மற்றும் புத்தளத்தைச் சேர்ந்த மதுஷ தில்ஷன் ஜெயதிஸ்ஸ, நிபுண் சதருவான் மற்றும் நிலாந்த அருணகுமார ஆகிய ஆறு பேரே போதைப் பொருட்கள் கடத்தியதாக, இந்தியக் கடலோரக் காவற்படையால் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதி அவர்கள் பயணித்த ஹஆகர்ஷ துவாஹ என்கிற மீன்பிடி படகுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் சாமிக கமகே தேசப்பிரியவின் இயற்பெயர் தாரக நிஷாந்த ரூபசிங்க என்றும் அவருல்லு போதைப் பொருட்களை கடத்துவதற்காக போலி அடையாள அட்டை வழங்கப்பட்டிருந்தது என்று நீதிபதி தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த ஆறு பேரும் சர்வதேச போதைப் பொருட்கள் கடத்தல் வலையமைப்பின் ஒரு பகுதியாகச் செயல்பட்டனர் என்று நீதிமன்றத்தில் அரச தரப்பில் கூறப்பட்டது. எனினும், அவர்கள் தரப்பு சட்டத்தரணிகள், அவர்கள் சாதாரண மீனவர்கள் மட்டுமே, அவர்கள் கைது செய்யப்பட்ட போது போது போதைப் பொருட்கள் ஏதும் கண்டெடுக்கப்படவில்லை என்று வாதிட்டனர்.

ஆனால் இந்திய கடலோர காவற்படையின் சார்பில் அரச வழக்கறிஞர் அவர்கள் பயணித்த படகின் ஜி பி எஸ் நிலைப்படங்கள், செய்மதி தொலைபேசி உரையாடல்கள், வங்கி பணபரிமாற்ற ஆதாரங்களை நீதிமன்றில் சமர்ப்பித்து அவர்களுக்கும் போதைப் பொருட்கள் கடத்தலிற்கும் தொடர்புண்டு என்று எதிர்வாதம் செய்தனர்.

நீதிபதி விஜு ஆபிரஹாம் தனது உத்தரவில் சுனில் குரேரா இத்தாலியில் கடந்த 2000ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார், அவரது 5 பிள்ளைகள் இன்னும் இத்தாலியில் உள்ளனர் என்றும் ஆதரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, அவர்கள் இலங்கையர்கள் என்பதால், விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கை மூன்று மாதங்களுக்குள் விசாரித்து தீர்ப்பளிக்க வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

இவர்கள் ஆறு பேரும் விசாரணை நீதிமன்றில் இரு முறை பிணை கோரி விண்ணப்பித்தபோது அது நிராகரிக்கப்பட்டத்தால், அதை எதிர்த்து கேரள உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். (அ)




## வவுனியாவில் கர்ப்பவதிகளுக்கு சத்துணவுப் பொதிகள் வழங்கல்

வவுனியா, செப். 30

ஹற்றன் நஷனல் வங்கியின் “உங்களுக்காகவே நாம் போஷாக் குத்திட்டத்தின்” மூலம் வவுனியாவில் கர்பிணி தாய்மார்களுக்கு சத்துணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

வங்கியின் பிராந்திய பொறுப்பதிகாரி ந.கருணைராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.மகேந்திரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் கர்ப்பிணித்தாய்மார்கள் பின்பற்றவேண்டிய உணவுப் பழக்க வழக்கங்கள் தொடர்பாக விழிப்புணர்வு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதுடன் அதனைத் தொடர்ந்து தாய்மார்களுக்கான சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் உதவிப்பிரதேச செயலாளர் பிரியதர்சினி சஜீவன், வைத்தியர் ஜெயதரன், ஹற்றன் நஷனல் வங்கியின் கிளை முகாமையாளர் எஸ். சுரேஸ்குமார், சுகாதார வைத்திய அதிகாரி யூட் பீரிஸ், கிராம சேவகர்கள் உட்பட பிரமுகர்கள் கலந்துகொண்டனர். (அ)




## யாழ். போதனா வைத்தியசாலை முன்றிலில் விழிப்புணர்வு பேரணி

### போதைப்பொருள் பாவனைக்கு எதிராக

யாழ்ப்பாணம், செப். 30

போதைப்பொருள் பாவனை எதிராக விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையாக யாழ். போதனா வைத்தியசாலை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை பேரணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை முன்றிலில் இந்த பேரணி ஆரம்பித்து மணிக்கூட்டு கோபுர வீதியூடாக, யாழ் பொலிஸ் நிலையத்தை அடைந்து அங்கிருந்து பிரதான வீதியூடாக யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தை சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சனத் நிஷாந்தவுக்கு நீதிமன்றம் அழைப்பு

கொழும்பு, செப். 30

ஒக்ரோபர் 13ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

பிரியலால் சிறிசேன மற்றும் விஜிதகுமார ஆகிய இரு சட்டத்தரணிகள் சமர்ப்பித்த முறைப்பாட்டின் பூர்வாங்க பரிசீலனையின் பின்னர், நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர்.குருசிங்க ஆகிய நீதிபதிகள் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறி அவருக்கு எதிராக இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நினைவேந்தல்களை எதிர்ப்பது அடிப்படை மனித உரிமை மீறல்!

### அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 30

**“நினைவேந்தலுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது அடிப்படை மனித உரிமை மீறலாகும். வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தமிழ் மக்கள் அமைதியாகவே நடத்துகின்றனர்.**

அடிப்படை அரசியல் அறிவு அற்றவர்களே இதற்கு எதிராகக் கண்டனங்களை வெளியிடுகின்றனர். தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் தமிழர்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்கியே தீரும்.”

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தமிழினத்தால் ‘தியாக தீபம்’ என்று போற்றப்படும் திலீபனை வடக்கு, கிழக்கில் பகிரங்கமாக நினைவேந்திய வர்களை உடனடியாகச் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு போரிலோ அல்லது வேறு எந்தச் சந்தர்ப்பத்திலோ உயிரிழந்தவர்களை அவர்களின் உறவுகள் அல்லது அவர்களின் இனத்தவர்கள் அமைதியாக நினைவேந்த முடியும். இதற்கு எதிராக எவரும் கருத்துக்களை வெளியிட முடியாது.

தமிழ் மக்களின் நினைவேந்தல் உரிமையைப் பறித்துவிட்டு நாட்டில் எப்படி நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்? மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரச தரப்பினரும் அதன் நேர்வழி, மறைவழி பங்காளிகளும் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தியே வந்தார்கள்.

தமிழ் மக்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்க எந்த அரசும் முன்வரவில்லை. இந்த நாட்டில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் தமிழர்களுக்கான உரிமைகளையும், தீர்வுகளையும் வழங்கியே தீரும்- என்றார். (அ)

## காட்டு யானைகளை விரட்டியடிக்க வருடாந்தம் ரூ.2,800 மில்லியன் செலவு!

கொழும்பு, செப். 30

யானை-மனித மோதல்கள் அதிகரித்து வருவதையடுத்து யானைகளை கலைப்பதற்காக தேவைப்படும் யானை வெடிகளுக்காக அரசாங்கம் வருடாந்தம் 2,800 மில்லியன் ரூபாவை செலவிட்டு வருவதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வருடாந்தம் அதற்கென 14 இலட்சம் யானை வெடிகள் தேவைப்படுவதாகவும் அவை உள்ளூர் பட்டாசு உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதாகவும் அந்த திணைக்களம் தெரிவித்தது.

காட்டு யானைகள் விவசாய காணிகள் மற்றும் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும் வேளையில் அவற்றை அங்கிருந்து கலைப்பதற்காக வனஜீவராசிகள் திணைக்களம் மக்களுக்கு இலவசமாகவே யானை வெடிகளை வழங்கி வருகிறது.

அதேவேளை யானைகள் கிராமங்களுக்குள் பிரவேசிக்கும்போது அவற்றைக் கலைப்பதற்காக வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களின் எந்தவித ஒத்துழைப்பும் கிடைப்பதில்லை யென மக்கள் தமக்கு முறைப்பாடுகளை முன்வைத்து வருவதாக துறைக்கு பொறுப்பான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அந்த அதிகாரிகளை அழைத்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக அமைச்சர் கூறினார். (அ)

# தவிசாளர் நிரோஷ்க்கு எதிரான மாவீரர் நினைவேந்தல் வழக்கு முடிவுறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், செப். 30

கடந்த ஆண்டு மாவீரர் தினம் நினைவேந்தல் தொடர்பில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்க்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டதுடன் வழக்கும் முடிவுறுத்தப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றில் கடந்த ஆண்டு மாவீரர் தினம் அனுஷ்டிப்புத் தொடர்பாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை மல்லாகம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவ் வழக்கில் அச்சுவேலி பொலிசாரின் மேலதிக அறிக்கையின் பிரகாரம் கடந்த ஆண்டு இடம்பெற்ற மாவீரர் தின நினைவேந்தல்களில் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சட்டம் ஒழுங்கை மீறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி மல்லாகம் நீதிமன்றம் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை விடுவித்தது.

கடந்த ஆண்டு மாவீரர் தினத்திற்கு முன்பாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளருக்கு எதிராக அவர் உள்ளிட்டவர்கள் குற்றவியல் சட்டக் கோவை சரத்து 106 , பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் கொவிட் தொற்று சட்ட ஏற்பாடுகளையும் அறிவுறுத்தல்களையும் மீறி மாவீரர் தினத்தினை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கின்றனர் எனத் தெரிவித்து, அதற்குத் தடை விதிக்குமாறு மன்றில் விண்ணப்பித்திருந்தார். அதனை ஆட்சேபித்து கடந்த ஆண்டு சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா தலைமையில் சட்டத்தரணி திருக்குமரன் உள்ளிட்ட குழாம் எதிர்த்து வாதிட்டிருந்தது.

அவ் வழக்கில், (கடந்த ஆண்டு) குற்றவியல் சட்டக் கோவையின் மேற்படி சரத்தின் பிரகாரம் குற்றம் இழைப்பதற்கான வலுவான சாட்சியங்கள் இணைக்கப்படவில்லை என்றும் அரசியல் அமைப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நினைவு கூர்வதற்கான உரிமையினை மறுக்க முடியாது எனவும் ஏற்கனவே வலுவில் உள்ள சட்ட ஏற்பாடுகளையும் வர்த்தமானி அறிவுறுத்தல்களையும் சகலரும் கடைப்பிடிக்க வேண்டியவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், எவராவது சட்டத்தை மீறினால் பொலிசார் கைது செய்ய முடியும் எனவும் பொலிசாருக்கு மன்று தெரிவித்திருந்தது. அவ்வாறு நீதிமன்று தெரிவித்திருந்த நிலையில், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷிற்கு கடந்த 14 ஆம் திகதி மீளவும் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கட்டளை அனுப்பப்பட்டு வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கடந்த 14 திகதி வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, வழக்கில் நிரோஷ் சட்டம் ஒழுங்கை மீறியுள்ளாரா என பொலிஸாரிடம் நீதிபதியினால் கேள்வி எழுப்பப்பட்டது. இந் நிலையில் அடுத்த தவணையான நேற்று முன் தினம் புதன்கிழமை வழக்கு அழைக்கப்பட்டபோது மேலதிக அறிக்கையினை அச்சுவேலி பொலிஸார் தாக்கல் செய்தனர். அதனை ஆராய்ந்த நீதிமன்றம் வழக்கு இனி அழைக்கப்படமாட்டாது எனத் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்தியக் கடன் உதவியின் கீழ் சூரிய மின் படலம் பொருத்தல்

கொழும்பு, செப். 30

மத வழிபாட்டுத் தலங்களில் சூரிய சக்தியிலான மின் படலங்களை பொருத்துவது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மதவழிபாட்டு தலங்களில் சூரிய மின் உற்பத்தி படலங்களை பொருத்துவதற்கான கலந்துரையாடல் ஒன்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சில் இடம்பெற்றது.

மேலும் இந்தியாவின் கடன் உதவியின் கீழ் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இதேவேளை, இந்த கலந்துரையாடலில் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, கல்வி இராஜாங்க அமைச்சர், சில அமைச்சுக்களை பிரதிநிதித்துவபடுத்தும் அதிகாரிகளும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அடுத்த காங்கிரஸ் தலைவர்?

ப.சிதம்பரம்





காங்கிரஸ் கட்சியின் உள்கட்சித் தேர்தல் தொடர்பாக வழக்கத்துக்கு மாறாக - அழைப்பே இல்லாமல் மூக்கை நுழைக்கிற அளவுக்கு - இந்த முறை கட்சிக்கு வெளிவட்டாரங்களில் ஆர்வம் காட்டப்படுகிறது. பாஜகவின் தேசியத் தலைவராக ஜே.பி.நட்டா இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் 'தேர்ந்தெடுக்கப்பட்டபோது' அந்தக் கட்சியைச் சேர்ந்த தொண்டர்களும் சரி - காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எவருமே சரி - அதை ஒரு பொருட்டாகவே கருதி கவனம் செலுத்தியதே இல்லை. நட்டாவைத் தேர்ந்தெடுத்த 'வாக்காளர்கள் மன்றம்' எது, 'வாக்காளர் பட்டியல்' என்று ஏதாவது இருக்கிறதா என்று யாருமே கேட்கவும் இல்லை.

பாஜகவின் தேசியத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றியவர் யார் என்றோ, நட்டா தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தாரா என்றுகூட எவருமே கவலைப்படவில்லை. பாஜக ஆளுங்கட்சியாக இருந்த போதிலும் உலகிலேயே அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாக தன்னைப் பெருமையுடன் அறிவித்துக் கொண்டபோதிலும் - அந்தக் கட்சியின் தேசியத் தலைவர் தேர்தல் என்பது எவராலும் பேசப்படாமலேயே மிகச் சாதாரணமாக நடந்து முடிந்தது.

இப்போது காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவர் பதவிக்கான தேர்தலில் பாஜகவும் ஊடகங்களும் காட்டும் அசாதாரண ஆர்வம் இரண்டு உண்மைகளை நமக்கு உணர்த்துகின்றன. 'காங்கிரஸ் கட்சியே இல்லாத இந்தியா' என்ற முழக்கமானது சிலருடைய கற்பனை - என்றைக்கும் நிறைவேறாத ஆசை என்பது முதல் உண்மை இரண்டாவது, காங்கிரஸ் கட்சி நிகழ்த்திவரும் 'பாரத ஒற்றுமை யாத்திரை' (பாரத் ஜோடோ யாத்ரா) பாஜகவின் நிம்மதியைக் குலைத்து, அதை உலுக்கி எடுத்துக்கொண்டிருக்கிறது் காங்கிரஸ் என்றாலே சில ஆண்டுகளாக அசட்டையாக இருந்த செய்தி ஊடகங்களை எழுந்து உட்கார்ந்து, என்ன நடக்கிறது என்று உற்று கவனிக்க வைத்திருக்கிறது.

### கட்சியும் காந்திகளும்

காங்கிரஸ் தன்னுடைய தேசியத் தலைவரை அக்டோபர் மாதம் தேர்ந்தெடுக்கப்போகிறது. யார் தலைவராக வருவார் என்று என்னால் கூற முடியாது. கட்சியின் நிர்வாகிகளும் தொண்டர்களும், 2019 ஜூலை மாதம் தலைவர் பதவியிலிருந்து விலகிய ராகுல் காந்திதான் மீண்டும் கட்சித் தலைமைப் பதவியை ஏற்க வேண்டும் என்பதில் ஒரு மனதாக இருக்கிறார்கள். ஆனால், ராகுல் காந்தியோ, கட்சியின் தேசியத் தலைவராக மீண்டும் பதவியேற்கப் போவதில்லை என்பதைத் தெளிவுபடக் கூறிவிட்டார்.

ராகுல் காந்தி தன்னுடைய முடிவை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கட்சியின் தலைவர்கள் மேலும் ஒருமுறை இறுதியாக முயற்சிப்பார்கள் அதற்குப் பிறகும் அவர் தன்னுடைய முடிவை மாற்றிக் கொள்ள மறுத்துவிட்டால், அவருடைய எண்ணத்துக்கு மதிப்பு கொடுத்து கட்சித் தலைவர்கள் தங்களுடைய வற்புறுத்தலை நிறுத்திக்கொண்டு கட்சிப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு தகுதியுள்ள கட்சியின் 'வாக்காளர் மன்றம்' புதியவரை காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுத்து, இடைக்காலத் தலைமைத்துவம் என்ற இப்போதைய நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இந்திரா காந்தி குடும்பத்தைச் சேராத ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதால் கட்சி அவர்களை ஒதுக்கிவிட்டது என்றோ, அவர்கள் கட்சியைக் கைவிட்டுவிட்டார்கள் என்றோ பொருள் அல்ல என்பதே என் கருத்து.

### மக்கள் தலைவரும் கட்சித் தலைவரும்

காங்கிரஸின் வரலாறு அரிய பாடங்களைத் தன்னகத்தே கொண்டது. இந்திய அரசியல் வானில் காந்தி தோன்றிய பிறகு, காங்கிரஸின் தன்னிகரில்லா "மக்கள் தலைவர்" அவர் அங்கீகரிக்கப்பட்டார். காங்கிரஸுக்குக் கிடைத்த அரும்பெரும் தலைவர்கள் பலரில் காந்தியே மிக உயர்ந்த மக்கள் தலைவராகத் திகழ்ந்தார். அதேசமயம், 1921 முதல் 1948 வரையில் காங்கிரஸ் வெவ்வேறு பின்னணிகளைக் கொண்ட 14 ஆளுமைகளைக் "கட்சித் தலைவர்" ஆகப் பெற்றிருந்தது. சித்தரஞ்சன் தாஸ், சரோஜினி நாயுடு, எஸ்.சீனிவாச ஐயங்கார், முக்தார் அகமது அன்சாரி, மோதிலால் நேரு, ஜவாஹர்லால் நேரு, வல்லபபாய் படேல், ராஜேந்திர பிரசாத், சுபாஷ் சந்திரபோஸ், அபுல் கலாம் ஆசாத், ஆசார்ய கிருபளானி போன்ற மதிப்புமிக்க ஆளுமைகள் கட்சித் தலைவர் பதவியை அலங்கரித்தனர்.

காங்கிரஸின் நேரடி உறுப்பினர்கள் மட்டுமல்ல, கட்சிக்கு வெளியே இருந்துகொண்டு முழு மனதோடு அதன் நடவடிக்கைகளை ஆதரித்து வந்த சாமானியர்களுக்கும் கட்சியின் மக்கள் தலைவருக்கும், கட்சியின் நிர்வாகத் தலைவருக்கும் இடையேயான வேறுபாடு தெரிந்திருந்தது, காங்கிரஸ் கட்சியின் மக்கள் தலைவர் காந்தி, மற்றவர் தேர்ந்தெடுக்கப்படும் கடையின் நிர்வாகத் தலைவர் என்று. இப்படிச் செயல்படும் இருவருமே ஒருவர் மீது இன்னொருவர் மீது ஆதிக்கம் செலுத்த முனைவது இல்லை.

காங்கிரஸின் இந்த ஏற்பாடு, நாடு சுதந்திரம் பெற்ற பிறகும்கூட 1948 முதல் 1964 வரையிலும் தொடர்ந்தது. ஜவாஹர்லால் நேருவை காங்கிரஸின் மாபெரும் மக்கள் தலைவராக அனைவரும் அங்கீகரித்தார்கள். அவர் காலத்தில் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத் தலைவர் பதவியில் ஏழு பேர் அடுத்தடுத்து காங்கிரஸை நிர்வகித்தார்கள். இந்திரா காந்தி பிரதமராகப் பதவியேற்ற பிறகு 1965 முதல் 1984 வரையிலும்கூட இதே நிலைதான் நீடித்தது. காங்கிரஸ் கட்சியின் மாபெரும் மக்கள் தலைவராக இந்திரா காந்தி செயல்பட்ட அதே காலத்தில் எட்டு பேர் அடுத்தடுத்து காங்கிரஸ் கட்சியின் நிர்வாகத் தலைவர் பதவியில் இருந்து கட்சியின் நிர்வாகப் பொறுப்புகளை மேற்கொண்டார்கள்.

மிகப் பெரிய நாட்டின் மிகப் பெரிய அரசியல் இயக்கத்தில் இத்தகைய ஏற்பாடுகளே அர்த்தச் செறிவானவை.

கட்சியின் மக்கள் தலைவர் கட்சிக்குத் தலைமைத்துவத்தை அளிப்பதுடன், தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களை வகுத்து அதை மக்களுடனும் கட்சித் தொண்டர்களுடன் பகிர்ந்துகொள்வார், கட்சிக்குத் தேர்தலில் ஆதரவு தர மக்களுக்கு உந்து சக்தியாகத் திகழ்வார். கட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகத் தலைவரோ கட்சியின் அமைப்புகள் அனைத்தையும் பழுது நீக்கி - ஒருங்கிணைத்துச் செயல்பட வைப்பதுடன் தேர்தல் காலத்தில் மக்களுடைய ஆதரவை அப்படியே தேர்தல் வெற்றியாக மாற்றும் வேலையை மேற்கொள்வார்.

இந்த இரு பதவிகளும் ஒன்றுக்கொன்று ஆதரவானவை, ஒன்றையொன்று வலுப்படுத்துபவை. இவ்விரு பதவிகளுக்குரிய பணிகளையும் செய்யும் ஆற்றலுடன் ஒரு தலைவர் கிடைத்துவிட்டால் அது அந்த அரசியல் கட்சியின் அதிருஷ்டம் அப்படியில்லை, இரு வெவ்வேறு தலைவர்கள்தான் அந்தக் கடமையைப் பகிர்ந்துகொள்கிறார்கள் என்றால் - அதுவே புத்திசாலித்தனம், நடைமுறைக்கு அதிகம் ஏற்றது.

### மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும்

மக்கள் தலைவர்கள் ஈர்த்திழுப்பவர்களாக இருப்பார்கள். காந்தி தன்னுடைய புதுமையான அரசியல் சித்தாந்தம் மூலம் அகிம்சை, ஒத்துழையாமை, சட்ட மறுப்பு இயக்கம் ஆகிய போராட்ட முறைகளைக் கையாண்டு, இறுதியாக 'வெள்ளையனே வெளியேறு' என்ற விரிவான இயக்கம் மூலமாக வெற்றி கண்டார்.

இப்படி நேரு உலக அரங்கில் அணிசாராக் கொள்கை, அரசு நிர்வாகத்தில் மதச்சார்பின்மை, சோஷலிஸம் ஆகிய உயர்ந்த லட்சியங்களைக் கடைப்பிடித்து மக்களுடைய மனங்களில் நீங்காத இடம் பிடித்தார். நாட்டை முன்னேற்ற முடியும் என்று வலுவாக கற்பனை செய்யுங்கள் என்று மக்களுக்கு அறைகூவல் விடுத்த இந்திரா, வங்கிகளைத் தேசியமயமாக்குவது - அனைவருக்கும் வீட்டு வசதி செய்து தருவது போன்ற சோஷலிஸ நடவடிக்கைகளைத் துணிச்சலுடன் மேற்கொண்டார். பாஜகவிலும்கூட இதற்கு ஓர் உதாரணம் உண்டு. குமரி முதல் காஷ்மீர் வரை இந்தியாவின் அனைத்துப் பகுதிகளையும் தேசிய நெடுஞ்சாலைகள் மூலம் இணைக்கும், தங்க நாற்கரத் திட்டத்தைக் கொண்டுவந்து நாட்டின் வளர்ச்சிப் பாதையை விரிவுபடுத்தினார் வாஜ்பாய். உத்வேகம் தரும் ஒரு சொற்சொடர் (நேரு - விதியுடன் ஒரு பயணம்) அல்லது பிடித்திழுக்கக்கூடிய ஒரு முழக்கம் (இந்திரா - வறுமையே வெளியேறு) அல்லது விரிவான ஒரு தொலைநோக்கை வெளிப்படுத்தும் சொல்லாடல் (வாஜ்பாய் - இன்சானியாத்-ஜமூரியாத்-காஷ்மீரியாத்) மூலம் தன்னோடு சேர்த்துக் கட்சியையும் ஒரு பெரும் உயரத்துக்குத் தலைவரால் கொண்டுசெல்ல முடியும்.

கட்சியின் செல்வாக்குமிக்க மக்கள் தலைவர்களுக்கும், தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகத் தலைவர்களுக்கும் கடமைகள் வெவ்வேறானவை.

கட்சியின் நிர்வாகத் தலைவர், மண்ணில் ஆழ வேரூன்றிய - நாட்டு நடப்புகளில் நல்ல ஞானம் உள்ளவராக இருப்பது அவசியம், கட்சித் தொண்டர்களுக்கு உரமேற்றி வழிநடத்த வேண்டும், கட்சியின் நலன் கருதி கடுமையான முடிவுகளையும் எடுக்க வேண்டும். காங்கிரஸ் கட்சியின் நிர்வாக இயந்திரம் பழுதுபட்டும் - முழுமையாகப் பயன்படுத்தப்படாமலும், மிக விரைவாகவும் - விரிவாகவும் சீர்படுத்தப்பட வேண்டிய நிலையிலும் இன்றைக்கு இருக்கிறது.

இதைச் செய்ய கட்சியின் நிர்வாகத் தலைவருக்கு ஒவ்வொரு நாளும் அதிக மணி நேர உழைப்பும், அதிக மணி நேரப் பயணமும் அவசியம். கட்சியின் ஒவ்வோர் உறுப்பும் எப்படிச் செயல்படுகிறது என்பதைக் கட்சித் தலைவர் இடைவிடாது கவனிக்க வேண்டும். வாக்குச்சாவடி நிலையில் உள்ள குழுக்களிலிருந்து வட்டார காங்கிரஸ் நிர்வாகம் வரை, மாவட்ட அமைப்புகள் முதல் - மாநில அமைப்புகள் வரை எப்படிச் செயல்படுகின்றன என்று கண்காணித்து, தகுந்த ஆலோசனைகளையும் சரியாகச் செயல்படுவதற்கான யோசனைகளையும் வழங்க வேண்டும்.

கட்சியின் நிர்வாகத் தலைவர் தொண்டர்களைத் தகுந்த முறையில் வேலை வாங்க அரவணைத்துச் செல்ல வேண்டும் - தவறு செய்யும் நேரங்களில் உறுதியாகக் கண்டித்து திருத்த வேண்டும், ஆக்கப்பூர்வமாகச் செயல்படும் தலைவர்களுக்குப் பதவிகளும் பாராட்டும் தந்து கௌரவப்படுத்த வேண்டும், கடமை தவறுகிறவர்களையும் கட்சிக்கு விரோதமாக நடப்பவர்களையும் கண்காணித்து உரிய வகையில் தண்டிக்க வேண்டும். கட்சி இயந்திரத்தில் இனி பயன்படுத்தவே முடியாமல் பழுதடைந்த பிரிவுகளையும், காலத்துக்கு ஒவ்வாதவற்றையும் கழற்றி அகற்றிவிட்டு புதிய - வலிமையான உறுப்புகளைச் சேர்க்க வேண்டும்.

கட்சியின் நிர்வாகத் தலைவர் பதவி என்பது ஒரு நாளில் 24 மணி நேரம், ஒரு வாரத்தில் ஏழு நாள்கள், ஓராண்டில் 364 நாள்கள் இடைவிடாமல் பணி செய்தாக வேண்டிய பொறுப்பு மிக்கதாகும் (தலைவரின் பிறந்த நாளுக்கு மட்டும் இதில் விதிவிலக்கு). பல கட்சிகளைக் கொண்ட இந்திய அரசியல் முறைக்கும், துடிப்பான நாடாளுமன்றச் செயல்பாட்டுக்கும் காங்கிரஸ் கட்சி இன்றியமையாதது. காங்கிரஸ் கட்சி இல்லாவிட்டால் நாட்டில் 'ஒரு கட்சி ஆட்சி' அமலுக்கு வரும் - ஜனநாயகம் என்பதும் நடைமுறையில் கண்ணுக்குப் புலப்படாத 'மாய மான்' ஆக இருக்கும்.

காங்கிரஸ் கட்சியின் மக்கள் தலைவரே, கட்சியால் தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகத் தலைவராகவும் இருப்பாரா அல்லது இரு வெவ்வேறு தலைவர்கள் கட்சியை வழிநடத்துவார்களா என்பது இன்னும் சில நாள்களில் தெரிந்துவிடும். காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமல்ல் நாட்டுக்கே இந்த வாரம் மிக முக்கியமானதாக இருக்கப் போகிறது. இன்னொரு கோணத்தில் சிந்தித்தால் - காங்கிரஸ் கட்சியின் உள்கட்சி ஜனநாயகத்தில் அதிலும் நிர்வாகத் தலைவர் தேர்தலில், மற்றவர்கள் காட்டும் வழக்கத்துக்கு மாறான ஆர்வத்திலும் ஏதோ நியாயம் இருக்கிறது என்றே தோன்றுகிறது!

●

# தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு கடல் வழியாக கஞ்சா கடத்தல் நடப்பது எப்படி?

பிரபுராவ் ஆனந்தன்

தமிழகத்தில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுப் படகில் கஞ்சா கடத்திச் சென்றதாக ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த 5 பேரை இலங்கை கடற்படையினர் சமீபத்தில் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

நாகை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட கடலோர மாவட்டங்கள் இலங்கைக்கு மிக அருகில் இருப்பதால் இங்கிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கஞ்சா, சமையல் மஞ்சள், கடல் அட்டை, பீடி இலை, கடல் குதிரை, விவசாய உரங்கள் உள்ளிட்டவை கடல் வழியாகக் கடத்தப்பட்டு வருகின்றன.

அதேபோல் இலங்கையிலிருந்து சட்ட விரோதமான முறையில் கடல் வழியாக தங்க கட்டிகள் தமிழகத்துக்குள் கடத்தி வரப்படுகின்றன. இந்த சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவும், இதில் ஈடுபட கூடிய நபர்களை கைது செய்யவும் இந்திய கடற்படை, கடலோர காவல்படை, மாவட்ட காவல்துறை, கடலோர பாதுகாப்பு குழும பொலிசார் உள்ளிட்டோர் தீவிரமாக ஈடுபட்டு வரும் நிலையில் அவர்களது கண்காணிப்பையும் மீறி சமீபகாலமாக அதிக அளவு கஞ்சா இலங்கைக்கு கடத்தப்பட்டு வருகிறது.

**மீனவர்கள் போர்வையில் கஞ்சா கடத்திய ஐவர்**

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தி வரப்படுவதாக இலங்கை கடற்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து புத்தளம் மாவட்டம் கல்பிட்டி குதிரைமலை முனை மேற்கு கடல் பகுதியில் இலங்கை கடற்படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

அப்போது நடுக்கடலில் சந்தேகத்திற்கிடமான முறையில் பதிவெண் இல்லாத தமிழகத்தைச் சேர்ந்த நாட்டுப் படகு ஒன்று நின்று கொண்டிருந்ததைக் கண்ட கடற்படையினர் நாட்டுப் படகை நோக்கிச் சென்றனர். இதையறிந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த நாட்டுப்படகு அங்கிருந்து தப்பிக்க முயன்றபோது இலங்கை கடற்படையினர் விரட்டிப் பிடித்து சுற்றி வளைத்தனர். பின்னர் கடற்படை வீரர்கள் நாட்டுப் படகை சோதனை செய்ததில் கஞ்சா மூட்டைகள் படகுக்குள் மறைத்து வைத்திருந்தது தெரிய வந்தது.

இதையடுத்து அந்தப் படகில் இருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐந்து பேர், இலங்கை நீர் கொழும்பு பகுதியைச் சேர்ந்த ஐந்து பேர் என மொத்தம் பத்து பேரை விசாரணைக்காக கல்பிட்டி கடற்படை முகாமுக்கு அழைத்து சென்றனர்.

அதைத் தொடர்ந்து பத்து பேரையும் இலங்கை கடற்படையினர் போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைத்து, பின் இலங்கை சிறையில் அடைத்தனர்.

**மீனவர்களை கடத்தல்காரர்களாக மாற்றும் கும்பல்**

கஞ்சா எவ்வாறு இலங்கைக்கு கடத்தப்படுகிறது என்பது குறித்து கடத்தல் சம்பவங்களில் ஈடுபட்டு சிறை சென்று திரும்பிய நபர் ஒருவர் நம்மிடம் பேசிய போது, “நான் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு கடத்தல் தொழில் செய்து போலீசாரால் கைது செய்யப்பட்டு சிறைக்கு சென்று, பின்னர் விடுதலையாகி தற்போது போதைப் பொருள் கடத்தல் தொழிலை முற்றிலுமாக நிறுத்தி விட்டு மீன்பிடித் தொழில் செய்து வருகிறேன்.”

“நான் ஒரு நாள் மாலை கடற்கரையில் மீன்பிடி வலைகளைச் சரி செய்து கொண்டிருந்த போது ஒருவர் வந்து “மீன்பிடித் தொழில் எப்படிப் போகிறது” எனப் பேச ஆரம்பித்தார். சில நொடிகளில் “குறைந்த நாட்களில் அதிக பணம் சம்பாதிக்கலாம், அதற்கு நான் படகில் ஏற்றி விடும் பொருட்களை நடுக்கடலில் நிற்கும் இலங்கை படகிற்கு கை மாற்றிவிட்டால் மட்டும் போதும், செய்ய முடியுமா?“ என்று என்னிடம் கேட்டார்.

முதலில் தயங்கிய நான் பிறகு குடும்ப கஷ்டம் காரணமாக அதைச் செய்ய சம்மதித்தேன். உடனே அவர் “நாளை இரவு உங்க நாட்டுப்படகை இந்த இடத்தில் நிறுத்தி விடுங்கள். நாங்கள் பொருட்களை ஏற்றியதும் தகவல் தருகிறோம்” எனத் தெரிவித்து விட்டுச் சென்றார்.

மறுநாள் இரவு அவர் சொன்ன இடத்தில் எனது நாட்டுப்படகைக் கொண்டு சென்று நிறுத்தினேன்.



சிலர் படகில் ஏறி கஞ்சா மூட்டைகளை படகின் அடிப்பகுதியில் வைத்து அதன் மீது மீன்பிடி வலைகளைப் போட்டு விட்டுச் சென்றனர். பிறகு எனது கைபேசி எண்ணிற்கு ஜிபிஎஸ் மார்க் எண் ஒன்று குறுஞ்செய்தியாக வந்தது. அப்போது குறுஞ்செய்தி வந்த எண்ணில் தொடர்பு கொண்ட நபர் இந்த ஜிபிஎஸ் மார்க் எண்ணில் இலங்கை படகு ஒன்று நிற்கும் அல்லது அந்த இடத்தில் காத்திருந்தால் இலங்கை படகில் சிலர் வருவர். அங்கு வந்து இதைப் பெற்று செல்வார்கள் என்றார்.

இரவு படகில் புறப்பட்டு ஜிபிஎஸ் மார்க் குறிப்பட்ட இடத்திற்குச் சென்றவுடன் அவர் குறிப்பிட்டது போல் இலங்கை ஃபைபர் படகில் வந்த சிலர் கஞ்சா மூட்டைகளை நடுக்கடலில் வைத்து பெற்றுச் சென்றனர்.

அதேபோல் இரண்டு முறைக்கு மேல் செய்தேன். இலங்கை நபர்களுடன் ஏற்பட்ட நட்பால் கஞ்சா கடத்தலை நான் தனியாகச் செய்யத் திட்டமிட்டு கஞ்சா, சமையல் மஞ்சள், கடல் அட்டைகள் உள்ளிட்டவற்றைக் கடத்தி வந்தேன்,” என்றார் பெயர் வெளியிட விரும்பாத அந்த நபர்.

**சாலை மார்க்கமாகக் கொண்டுவரப்படும் கஞ்சா**

தொடர்ந்து பேசிய அந்த நபர், “கேரள வனப்பகுதியில் விளைவிக்கப்படும் கஞ்சா செடிகள், தேனி வழியாக சாலை மார்க்கமாக தென் மாவட்டங்களுக்குள் கொண்டு வரப்படும். அதேபோல் ஆந்திராவில் இருந்து எடுத்து வரப்படும் கஞ்சா, நாகை மாவட்டம் வேதாரண்யம், முத்துப்பேட்டை, ஆறுகாட்டுதுறை பகுதிகள் வழியாக இலங்கைக்கு கடத்தப்படும்.

கஞ்சா மூட்டைகளில் உள்ள கஞ்சாவை இரண்டு கிலோ பாக்கெட்டுகளாக பொட்டலம் கட்டி தேவைகேற்ப மூட்டைகளில் அடைத்து வாகனங்களில் கடலோர பகுதிகளுக்கு எடுத்து வரப்படும்.

இரவு நேரத்தில் பொலிசார் வாகன சோதனையில் ஈடுபடுவார்கள் என்பதால் பெரும்பாலும் பகல் நேரத்தில் எடுத்து வரப்படுகிறது. அதேபோல் கஞ்சாவை இலங்கைக்கு எடுத்துச் செல்ல திட்டமிடும் நாளன்று மட்டும் கஞ்சா பொட்டலங்களை வரவழைப்போம். அதற்கு முன் கொண்டு வந்து சேமித்து வைக்க மாட்டோம்,” என்றார்.

**நடுக்கடலில் உயிர் பயத்தைக் காட்டும் கடற்படை**

மேற்கொண்டு பேசியவர், “சில நேரம் கடற்படை நடுக்கடலில் படகில் கஞ்சா இருப்பதை அறிந்து எங்களைப் பிடிக்க துரத்தும் போது முடிந்தளவு அவர்களிடம் இருந்து தப்பிக்க முயல்வோம். அது முடியவில்லையெனில் கஞ்சா மூட்டைகளைக் கடலில் வீசி விடுவோம்.

கடலில் வீசும் கஞ்சா பொட்டலங்கள் இரண்டு நாட்களுக்கு பிறகு கடல் நீரோட்டத்தில் கடற்கரைகளில் ஆங்காங்கே கரை ஒதுங்கும். சில நேரங்களில் கடற்படை துரத்தும் போது சில படகுகள் நடுக்கடலில் கவிழ்ந்து படகில் செல்பவர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்படும்.

இலங்கையில் இருந்து இவ்வளவு கிலோ கஞ்சா தேவை என்ற தகவல் முதலில் குறுஞ்செய்தியாக வரும். ஆனால் இப்போது வாட்ஸ்ஆப் அழைப்பு மூலம் தகவல் தெரிய வருகிறது. வாட்ஸ்ஆப் அழைப்பை பொலிசாரால் இடைமறித்துக் கேட்க முடியாது என்பதால் அதன் மூலம் தொடர்பு கொள்கின்றனர்.

இலங்கைக்கு கடத்திச் செல்லும் கஞ்சாவுக்கு பணத்தை இலங்கையைச் சேர்ந்தவர்கள் நேரடியாக எங்களிடம் கொடுக்க மாட்டார்கள். கஞ்சாவுக்கு பணத்தை தமிழகத்தில் உள்ள சில நபர்களின் தொடர்பு எண்ணைக் கொடுத்து அவர்களைத் தொடர்பு கொண்டு பணத்தை வாங்கிக் கொள்ளுமாறு சொல்வார்கள். நாங்களும் அதே போல் அந்த எண்ணைத் தொடர்பு கொண்டால், ஓரிடத்திற்கு வரச் சொல்லி அங்கு வைத்து அந்தப் பணத்தை எங்களிடம் கொடுப்பார்கள்.

சில நேரங்களில் பணத்தை இரண்டு தவணையாகக் கொடுப்பார்கள். நம்பிக்கையின் அடிப்படையில் தான் இந்தத் தொழில் நடந்து வருகிறது.

**உண்டியல் முறையில் பணப் பரிமாற்றம்**

ஒவ்வொரு முறையும் வெவ்வேறு தொலைபேசி எண்கள், வெவ்வேறு நபர்களிடம் இருந்து பணம் பெற்று கொள்வோம். இது “உண்டியல் முறை வரவு செலவு” என்று கடத்தல்காரர்கள் மத்தியில் அழைக்கப்படுகிறது.

ஆனால் பல நேரங்களில் எங்களுக்குக் கொடுக்கக் கூடிய பணத்திற்குப் பதிலாக அதற்கு நிகரான மதிப்பு கொண்ட தங்க கட்டிகள் இலங்கையிலிருந்து கொடுத்து விடப்படும். பண நெருக்கடியில் இருக்கும் எளிய மீனவர்கள் மத்தியில் பணத்தாசையைத் தூண்டி அவர்களைக் கடத்தலுக்கு பயன்படுத்தி வருகின்றனர்,” என்றார்.

**போதைப் பொருள் கடத்திய 91 நபர்களின் வங்கிக் கணக்கு முடக்கம்**

ராமநாதபுரம் மாவட்ட கடல் வழியாக நடைபெறும் போதைப் பொருள் கடத்தல் சம்பவங்களைத் தடுப்பது குறித்து எடுக்கப்பட்டு வரும் தீவிர நடவடிக்கை குறித்து ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை பேசுகையில், ராமநாதபுரம் மாவட்டத்தில் போதைப் பொருள் கடத்தும் நபர்கள் குறித்த தகவல்கள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டுள்ளது என்றார்.

மேலும், “இதுவரை 589 நபர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களின் நடவடிக்கைகளை முழுமையாகக் கண்காணித்து வருகிறோம். அதில் 130 நபர்கள் மீது கூடுதலாக கவனம் செலுத்தி வருகிறோம். போதைப் பொருள் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடும் 91 நபர்களின் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையால் சமீபத்தில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஐந்து நபர்களில் மூவருக்கு முன்னதாகவே போதைப் பொருள் கடத்தல் வழக்குகளில் தொடர்பு உள்ளது. இருவர் புதிதாக கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 12ஆம் திகதி தங்கச்சிமடத்தில் இருந்து நாட்டுப்படகில் புறப்பட்டவர்கள் 14ஆம் திகதி இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர். இடைப்பட்ட நாட்களில் அவர்கள் எங்கு சென்றார்கள், எங்கிருந்து கஞ்சா கடத்தப்பட்டது, யார் மூலமாக கஞ்சா கடத்தப்பட்டது என்பது குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான கடலோரப் பகுதிகளில் கூடுதலாக சோதனைச் சாவடி அமைப்பது குறித்து அந்தப் பகுதிகளில் கூடுதல் கண்காணிப்புப் பணியில் பொலிசாரை ஈடுபடுத்துவது குறித்து விரிவான ஏற்பாடு செய்வதற்கு ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**சர்வதேச கடல் எல்லையில் 24 மணி நேரம் தீவிர கண்காணிப்பு**

கடத்தல் சம்பவங்களைத் தடுப்பது குறித்து இந்திய கடலோர காவல் படை அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது, “தனுஷ்கோடி இலங்கைக்கு அருகே உள்ளதால் சர்வதேச கடல் எல்லை வழியாக சட்டவிரோத நடவடிக்கைகள் அதிகம் நடைபெறுகிறது.

கடல் வழியாக நடைபெறும் சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காக இந்திய கடலோர காவல் படைக்குச் சொந்தமான ஹோவர் கிராஃப்ட் ரோந்து கப்பல்கள் மணல்திட்டு பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

வான்வெளியில் இந்திய கடற்படைக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்கள், முழு வீச்சில் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. கடலோர காவல் படைக்குச் சொந்தமான ரோந்து கப்பல்களை 24 மணி நேரம் ரோந்துப் பணியில் ஈடுபடுத்தி வருகிறோம். இருப்பினும் மீனவர்கள் தங்களது மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தி போதைப் பொருட்களைக் கடத்திச் செல்வதால் கண்டுபிடிப்பதற்குச் சற்று சிரமமாக உள்ளது.

மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாதம் ஒருமுறை மீனவ கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று கடலில் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம், நடுக்கடலில் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் குறித்து தகவல் தெரிவிக்கவும், அந்நிய ஊடுருவல்கள் எதுவும் இருந்தால் உடனடியாகத் தொடர்பு கொள்ள வேண்டும் என்று தெரிவித்து வருகிறோம்.




போதைப் பொருள் கடத்தல் சம்பவங்களை விரைவில் முற்றிலுமாகத் தடுத்து நிறுத்துவதற்கான தீவிர முயற்சியில் இந்திய கடற்படை, கடலோர காவல் படை மற்றும் கடல் பாதுகாப்பு குழுமம் ஈடுபட்டு வருவதாக அந்த கடலேரா காவல் படை அதிகாரி தெரிவித்தார். (பிபிசி)

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1) 
2) 
3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஒரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

60. பொருத்தமான வாக்கியங்கள்

## கல்வி tv CHANNEL-1

**30.09.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**30.09.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்கு பல்கலைக்கழகத்தின் 26ஆவது பொதுப்பட்டமளிப்பு

மட்டக்களப்பு, செப். 30

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 26ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா, எதிர்வரும் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் இடம்பெறவுள்ளதாக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்குப்பல்கலைக்கழகம் ஆரம்பித்து 42 வது ஆண்டை நினைவுகூரும் முகமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக வாரமான ஒக்ரோபர் 1 திகதி முதல் 7 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெறும் முதலாவது நிகழ்வாக பல்கலைக்கழக பொதுப்பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

குறித்த பொதுப்பட்டமளிப்பு விழாவில் 2506 உள்வாரி, வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கும், பட்டப்பின் தகைமை மாணவர்களுக்கும் பொதுப்பட்டமளிப்பு விழா கிழக்குப்பல்கலைக்கழக நல்லையா கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பட்டமளிப்பு நிகழ்வானது இவ்வருடத்தில் நடைபெறும் இரண்டாவது பட்டமளிப்பு நிகழ்வாகவும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட வேந்தர் ஓய்வு நிலைப் பேராசிரியர் மாநாகப்போடி செல்வராஜா தலைமை வகித்து பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கும் முதலாவது நிகழ்வாகவும் அமைகின்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இலங்கைக்கான இந்திய தூதுவர் ஸ்ரீ கோபால் பாக்லேயும், தமிழ் நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ந.பஞ்சநாதமும் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றவுள்ளார்கள்.

இம்முறை நடைபெறவிருக்கும் பட்டமளிப்பு நிகழ்வானது கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் அதிக மாணவர்களுக்கான பொதுப்பட்டமளிப்பு நிகழ்வாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் முதன்முறையாக கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பம் மற்றும் முயற்சியாண்மையில் உயிர் முறைமைகள் தொழில்நுட்ப கௌரவ இளமாணி பட்டம் வழங்கப்படவிருப்பதும் சிறப்பம்சமாகும்.

123 பட்டப்பின் தகைமைகளுக்கான பட்டங்களும், 263 இளமாணிப்பட்டங்களும் முதலாம் நாள் முதலாவது அமர்வில் வழங்கப்படவுள்ளன.

ஏனைய இளமாணிப் பட்டங்களுக்காக 2ஆவது அமர்வில் 313 பட்டதாரி மாணவர்களும், 3ஆவது அமர்வில் 548 பட்டதாரி மாணவர்களும், இரண்டாம் நாள் நிகழ்வில் முதலாவது அமர்வில் 396 பட்டதாரி மாணவர்களும், 2வது அமர்வில் 549 பட்டதாரி மாணவர்களும், 3ஆவது அமர்வில் 314 பட்டதாரி மாணவர்களும் பட்டமளித்து கௌரவிக்கப்படவுள்ளனர். (அ)



# கிழக்கில் தொடருகின்றது கையெழுத்து போராட்டம்!

அம்பாறை, செப். 30

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை அம்பாறை மாவட்டம், நாவிதன்வெளி, மத்திய முகாம் 3 இல் அமைந்துள்ள ஆலய முன்றலில் மக்களின் பேராதரவுடன் முன்னெடுக்கப்பட்டது.

நாவிதன்வெளி, மத்திய முகாம் 3 இல் அமைந்துள்ள ஆலய முன்றலில் மக்களின் பேராதரவுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அரசியல்வாதிகள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் அம்பாந்தோட்டை வரை கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கௌரவமான உரிமையுடன் தீர்வு; திருகோணமலையில் போராட்டம்

திருமலை, செப். 30

“கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்“ என்னும் தொனிப்பொருளில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் முன்னெடுக்கப்படும் 100 நாட்கள் செயல்முனைவின் 59ஆவது நாள் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை திருகோணமலை சலப்பை ஆற்றுப் பகுதியில் இடம்பெற்றது.

இச் செயற்றிட்டத்தில் திருகோணமலை சலப்பை பகுதி மக்கள்,சிவில் சமூக அமைப்புக்கள்,பாதிக்கப்பட்ட மக்கள் விவசாய மற்றும் மீனவ அமைப்புகள், என பலரும் கலந்து கொண்டு கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இதன்போது நாங்கள் நாட்டை துண்டாடவோ தனி அரசோ கேட்கவில்லை, இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம், எமக்கு வேண்டும், எங்கள் நிலம்,ஒன்று கூடுவது எமது உரிமை, வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகார பகிர்வு என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் போன்ற பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தன. (அ)

## நிந்தவூர் கடலரிப்பு விவகாரம்

# கரையோர பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகம் களப் பயணம்

அம்பாறை, செப். 30

நிந்தவூர் பிரதேச சபை உப தவிசாளர் வை எல் சுலைமா லெப்பையின் அழைப்பினையேற்று, கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் ஆர்.ஏ.எஸ். ரணவக்க நிந்தவூர் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார்

நிந்தவூர் பிரதேசத்தில் அண்மைக்காலமாக நிலவி வரும் தொடர் கடலரிப்பின் மூலமாக ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் பார்வையிட்ட அவர் எதிர்காலத்தில் கடலரிப்பினைத் தடுப்பதற்கான தடுப்புச் சுவரினை அமைக்கும் நிரந்தர நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

இலங்கையில் எந்த ஊரிலும் ஏற்படாத கடலரிப்பினை, நிந்தவூரில் தான் கண்டு கொண்டுள்ளதாக தெரிவித்த அவர், நிரந்தர தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் விரைவில் செய்து நிந்தவூர் பிரதேசத்தில் கடல் அரிப்பினை தடுப்பதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம் தாஹிர், உப தவிசாளர் வை எல் சுலைமாலெப்பை, பிரதேச சபை உறுப்பினர்களான எம் எம் . அன்சார், சட்டத்தரணி ரியாஸ் ஆதம், ஏ.அஸ்வர், கே.எம். ஜாரிஸ், எம் மஜீத், ஏ எம் வாஹிட் மற்றும் மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களுக்கான கலையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் பிராந்திய பொறியியலாளர் எம்.துளசிதாசன், நிந்தவூர் எமரெல்ட் விளையாட்டு கழகத்தின் தலைவரும், சமூகவியலாளருமான எம் சி எம். றிபாய் மற்றும் மீனவர்களான மஜீத், நிசார் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (அ)

# விசேட தேவையுடையவர்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு செயலமர்வு

அம்பாறை, செப். 30

இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் விசேட தேவையுடையவர்களை சமூக மற்றும் பொருளாதார ரீதியாக வலுவூட்டும் பல்வேறு வேலைத் திட்டங்கள் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


அந்தவகையில், விசேட தேவையுடையவர்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான செயலமர்வு இறக்காமம் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ. சி அஹமட் நஸீல் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.எல். முகைதீனின் நெறியாழ்கையுடன் நடை இந்நிகழ்வில் சமூக சேவைப் பிரிவு உளவளத் துணை உத்தியோகத்தர் ஏ. எல். பைசல் வளவாளராக கலந்துகொண்டு சுயதொழில் ஊக்குவிப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான செயலமர்வை நடத்தினார். (அ)

# தென்கிழக்கு பல்கலை. மாணவி நோட்டிங்ஹாமுக்கு செல்கிறார்

அம்பாறை, செப். 30

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் ஆங்கில மொழித்துறையில் கல்வி கற்று, முதற்தரத்தில் சித்தியடைந்த அப்துல் சலீம் சைசூன் என்ற மாணவி, பொதுநலவாய நாடுகளுக்கான உதவு தொகை பெற்று பிரித்தானியாவில் உள்ள நோட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின் படிப்பைத் தொடர்வதற்காக செல்கிறார்.



குறித்த மாணவியை வாழ்த்துவதுடன் அவருடாக மற்ற மாணவர்களுக்கு ஊக்கமூட்டும் நிகழ்வு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் ஆங்கில மொழித்துறைப் பிரிவின் கேட்போர் கூடத்தில் ஆங்கில மொழித் துறைத் தலைவர் கலாநிதி ஏ.எம்.எம்.நவாஸ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் ஏற்பாட்டாளரும் தலைவருமான கலாநிதி ஏ.எம்.எம்.நவாஸ், தனது உரையின் போது குறித்த மாணவி தொடர்பான தனது புரிதல்களை இங்கு எடுத்துரைத்தார். இதன்போது சிரேஷ்ட விரிவுரையாளர்களான எம்.ஐ.எவ். கரீமா மற்றும் எம்.எம்.அப்துல் றஹ்மான் ஆகியோரும் மாணவி தொடர்பான தங்களது கருத்துக்களை முன்வைத்தனர்.

இறுதியாக குறித்த மாணவி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (அ)



## சீன உணவகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 17 பேர் பலி!

பீஜிங், செப். 30

சீனாவின் வடகிழக்கு நகரமான சாங்சுனில் உணவகம் ஒன்றில் நேற்று முன் தினம் புதன்கிழமை ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் காயமடைந்தனர்.

சமையல் எரிவாயு வெடித்து இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சீனாவில் கட்டடங்களின் மோசமான வடிவமைப்பு, போதிய பாதுகாப்பு முன்னேற்பாடுகள் இல்லாதது போன்ற காரணங்களால் அடிக்கடி தீ விபத்து மரணங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. அந்த நாட்டின் சாங்ஷா நகரில் கடந்த ஏப்ரல் மாதம் ஏற்பட்ட தீவிபத்தில் 53 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (அ)

# புளோரிடாவை பந்தாடிய 'இயன்'!

## கியூபா முழுவதும் இருளில் மூழ்கியது





நியூயோர்க், செப். 30

அமெரிக்காவை சமீபத்திய ஆண்டுகளில் தாக்கிய புயல்களில் மிகவும் சக்தி வாய்ந்ததாக கருதப்படும் இயன் புயல் தாக்கத்தால் புளோரிடாவில் பெரும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் புதன்கிழமை புளோரிடா கடலோரங்களில் 241 கி.மீ. வேகத்தில் பெரும் காற்று சூழன்றடித்தது. கடல் அலைகள் கரையோரங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. இவற்றுடன் பலத்த மழையும் பெய்ததால் கடலோரப் பகுதிகள் முடங்கின.

மழையால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் கார்கள் அடித்துச் செல்லப்படுவதையும் சில இடங்களில் வெள்ளம் ஏறக் குறைய வீடுகளின் கூரை மட்டத்துக்கு உயர்ந்துள்ளதையும் மரங்கள் காற்றில் வளைந்து ஆடுவதையும் சமூக ஊடகங்களில் வெளியாகி உள்ள வீடியோக்களில் காண முடிந்தது.

புயல் நகர்வதால் மத்திய புளோரிடாவின் சில பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதனால் வெள்ளப்பெருக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. மாகாணம் முழுவதும் கிட்டத்தட்ட 2 மில்லியன் வீடுகள் மற்றும் வணிகங்கள் நிறுவனங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

புயல் பாதிப்புகளை ஈடுபட்ட உதவும் வகையில் புளோரிடாவில் பேரிடர் நிலையை பிரகடனப்படுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனிடம் மாகாண அதிகாரிகள் கோரியுள்ளனர்.

இதேவேளை, புளோரிடா கடற்கரையை நேற்று முன்தினம் இயன் சூறாவளி நெருங்கியபோது படகொன்று மூழ்கியதில் அதிலிருந்த 20 கியூபா குடியேற்றவாசிகள் காணாமல் போயுள்ளதாக அமெரிக்க எல்லைச் சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே இயன் புயல் அமெரிக்காவின் அண்டை நாடான கியூபாவிலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. புயலால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் கியூபா முழுவதும் இருளில் மூழ்கியது.

இங்கு மணிக்கு 195 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று சூழன்றடித்தது. இந்த புயலால் அந்த நாட்டின் முக்கிய மின் உற்பத்தி நிலையங்கள் கடும் சேதம் அடைந்தன. இதன் எதிரொலியாக ஒட்டுமொத்த நாடும் இருளில் மூழ்கியது. இதனால் அந்த நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்கியுள்ளது. 1.10 கோடி மக்கள் இருளில் தவிக்கின்றனர். மின் உற்பத்தியை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகள் முழு வீச்சில் நடந்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# புளோரிடாவில் சூறாவளி பாதிப்பால் 2,000 விமானங்கள் நேற்று இரத்து




நியூயோர்க், செப். 30

சமீபத்திய ஆண்டுகளில் மிகவும் சக்திவாய்ந்த இயன் சூறாவளி புளோரிடாவின் வளைகுடா கடற்கரையை தாக்கி அழிவுகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்தப் பகுதிகளுக்கு இடையே சேவையில் ஈடுபடும் சுமார் 2,000 விமானங்கள் நேற்று வியாழக்கிழமை இரத்துச் செய்யப்பட்டன.

சூறாவளி அமெரிக்க விமானப் பயணத்தில் குறிப்பிடத்தக்க இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக தென்கிழக்கு அமெரிக்காவில். செவ்வாய்க்கிழமை முதல் இன்று வெள்ளிக்கிழமை வரை 5,000க்கும் மேற்பட்ட விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

புளோரிடா விமான நிலையங்கள் தற்காலிகமாக செயல்பாடுகளை நிறுத்தியதால், நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த விமான நிலையங்கள் ஊடாக சேவையில் ஈடுபடும் 2,163 விமானங்கள் இரத்துச் செய்யப்பட்டன.

நேற்று வியாழக்கிழமை 1,935 விமானங்கள் இரத்து செய்யப்பட்டதாகவும் இன்று வெள்ளிக்கிழமை 738 விமானங்கள் இரத்து செய்யப்பட வுள்ளதாகவும் விமான கண் காணிப்பு இணையத்தளமான ப்ளைட் அவேர் தெரிவித்துள்ளது.(அ)

# கனடாவில் பியோனா சூறாவளி தாக்கியதில் பெரும் அழிவுகள்!

## சேதப் பகுதிகளை பிரதமர் ட்ரூடோ ஆய்வு



மொன்றியல், செப். 30

கனடா வரலாற்றில் மிகக் கடுமையான சூறாவளிகளில் ஒன்றாகக் கருதப்படும் பியோனா சூறாவளி கனடாவின் கிழக்கு பகுதிகளை தாக்கியதில் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நேற்று முன்தினம் பார்வையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

கடந்த வார இறுதியில் பியோனா சூறாவளி கரையை கடந்த போது நோவா ஸ்கோடியாவின் - போர்ட் ஆக்ஸ் பாஸ்க் நகரம் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இந்தப் பகுதிக்கு நேற்று முன் தினம் சென்ற பிரதமர் ட்ரூடோ, புயலால் பாதிக்கப்பட்ட மக்களையும், அங்கு உதவி மற்றும் மீட்புப் பணிகளில் முன்னின்று செயற்பட்டு வரும் மீட்புப் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களையும் சந்தித்தார்.

இந்த விஜயத்தின்போது பிரதமருடன் மாகாண அதிகாரிகள், அமைச்சர்கள் குடி ஹட்சிங்ஸ் மற்றும் சீமஸ் ஓ"ரீகன் ஜூனியர் ஆகியோர் உடனிருந்தனர்.

பியோனா சூறாவளி கடந்த வாரம் கிழக்கு கனடாவை பந்தாடியது. மணிக்கு 179 கி.மீ. வேகத்தில் சூறாவளி காற்று சூழன்றடித்தது. இந்த புயலால் நோவா ஸ்கோடியா, நியூ பிரன்சுவிக், நியூபவுண்ட் லாண்ட் ஆகிய மாகாணங்களும், பிரின்ஸ் எட்வர்ட் மற்றும் மாக்டலின் தீவுகளும் கடுமையாக பாதிக்கப்பட்டன.

சேதமடைந்த முக்கியமான உள்கட்டமைப்புகளை சீர்படுத்த கனடாவுக்கு பல மாதங்கள் ஆகும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

புயல் தாக்கத்தில் இலட்சக் கணக்கான வீடுகளில் மின் சாரம் தடைப்பட்ட நிலையில் பெருமளவான இடங்களில் மின் கட்டமைப்புகள் சீர் செய்யப்பட்டு, மீள் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நோவா ஸ்கோடியாவின் - போர்ட் ஆக்ஸ் பாஸ்க் நகரம் புயல் தாக்கத்தின் பின்னர் ஒரு முழுமையான போர் மண்டலம் போன்று காட்சியளிப்பதாக அந்நகர மேயர் பிரையன் பட்டன் கூறினார். இங்கு 20க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்தன. இங்கு மட்டும் பல மில்லின் டொலர் மதிப்பிலான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக மேயர் பிரையன் பட்டன் கூறியுள்ளார்.

சேதமடைந்த எங்கள் நகரத்தை மீண்டும் கட்டியெழுப்ப பல மாதங்களாகும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)



## இங்கிலாந்துடனான தொடர் பாகிஸ்தான் அணி ஆதிக்கம்!

லாகூர், செப். 30

இங்கிலாந்துக்கு எதிரான 5ஆவது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியுடன் 7 போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது 20 கிரிக்கெட் தொடரில் 3 - 2 என்ற ஆட்டங்கள் கணக்கில் பாகிஸ்தான் முன்னிலை பெற்றுள்ளது. முஹமட் ரிஸ்வான் குவித்த அரைச் சதம் இந்த வெற்றிக்கு வழிவகுத்தது.

7 போட்டிகள் கொண்ட தொடரின் முதல் 4 போட்டிகள் நிறைவில் இரண்டு அணிகளும் தலா 2 வெற்றிகளை ஈட்டி தொடர் சமப்படுத்தப்பட்டிருந்ததால் இந்தப் போட்டி பரபரப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இரண்டு அணிகளுமே துடுப்பாட்டத்தில் பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டன. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் கடும் சிரமத்துக்கு மத்தியில் முஹமட் ரிஸ்வான் குவித்த அரைச் சதத்தின் உதவியுடன் 19 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது.

ஒரு பக்கத்தில் சீரான இடைவெளியில் விக்கெட்கள் சரிந்துகொண்டிருக்க மறு பக்கத்தில் ரிஸ்வான் திறயைமாக துடுப்பெடுத்தாடி அணியைப் பலப்படுத்தினார்.

அணித் தலைவர் பாபர் அஸாம் (9), ஷான் மசூத் (7), ஹைதர் அலி (4), இப்திகார் அஹ்மத் (15), அசிவ் அலி (5), முஹமட் நவாஸ் (0), ஷதாப் கான் (7), ஆமிர் ஜமால் (10), ஹாரிஸ் ரவூப் (5) ஆகியோர் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கத் தவறினர்.

எனினும், திறமையாக துடுப்பெடுத்தாடிய ரிஸ்வான் 46 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 63 ஓட்டங்களைப் பெற்றார். இந்த வருடம் 12 போட்டிகளில் ரிஸ்வான் பெற்ற 7ஆவது அரைச் சதம் இதுவாகும். இந்த 7 அரைச் சதங்களும் 26 நாட்களுக்குள் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மொஹமத் வசீம் 8 ஓட்டங்களுடன் ஆட்டமமிழக்காதிருந்தார்.

இங்கிலாந்து பந்துவீச்சில் மார்க் வூட் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் டேவிட் வில்லி, சாம் கரன் ஆகிய இருவரும் தலா 23 ஓட்டங்களுக்கு தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டு 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

பாகிஸ்தானால் நிர்ணயிக்கப்பட்ட 146 ஓட்டங்களை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, 15ஆவது ஓவரில் 6ஆவது விக்கெட்டை இழந்தபோது அதன் மொத்த எண்ணிக்கை 85 ஓட்டங்களாக இருந்தது.

ஆரம்ப வீரர்களான பில் சோல்ட் (3), அலெக்ஸ் ஹேல்ஸ் (1) ஆகிய இருவரும் ஆட்டமிழந்த பின்னர் டேவிட் மாலன் (36), பென் டக்கெட் (10) ஆகிய இருவரும் அணியை மீட்டெடுக்க முயற்சித்தனர்.

ஆனால், பென் டக்கெட்டும் அவரைத் தொடர்ந்து ஹெரி ப்றூக்கும் (4) ஆட்டமிழக்க இங்கிலாந்து மீண்டும் தடுமாற்றம் அடைந்தது. அணியின் மொத்த எண்ணிக்கை 62 ஓட்டங்களாக இருந்தபோது டேவிட் மலனும் மேலும் 17 ஓட்டங்கள் சேர்ந்தபோது சாம் கரனும் (17) ஆட்டம் இழக்க இங்கிலாந்து மோசமான நிலையை அடைந்தது.

எனினும், அணித் தலைவர் மொயின் அலியும் கிரீஸ் வோக்ஸூம் 7ஆவது விக்கெட்டில் 46 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கையை 131 ஓட்டங்களாக உயர்த்தினர். அப்போது 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த கிரீஸ் வோக்ஸ் ஆட்டமிழந்தார். இந் நிலையில் இங்கிலாந்தின் வெற்றிக்கு கடைசி ஓவரில் மேலும் 15 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

கடைசி ஓவரை கட்டுப்பாட்டுடன் வீசிய ஆமிர் ஜமால் 8 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து பாகிஸ்தானின் வெற்றியை உறுதிசெய்தார்.

மொயின் அலி 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகள் அடங்கலாக 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பாகிஸ்தான் பந்துவீச்சில் ஹாரிஸ் ரவூப் 41 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

# தென்னாபிரிக்காவுடனான தொடர் முதல் போட்டி இந்தியா வசமானது

திருவனந்தபுரம், செப். 30

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது இருபது 20 கிரிக்கெட் போட்டியில் 8 விக்கெட்களால் இந்தியா அமோக வெற்றி பெற்றது.

இந்த வெற்றியுடன் 3 போட்டிகள் கொண்ட சர்வதேச இருபது - 20 கிரிக்கெட் தொடரில் இந்தியா 1 - 0 என முன்னிலை பெற்றுள்ளது.

தென்னாபிரிக்கா நிர்ணயித்த 107 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா 16.4 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

அர்ஷ்தீப் சிங்கின் துல்லியமான பந்துவீச்சு, கே. எல். ராகுல், சூரிய குமார் யாதவ் ஆகியோர் குவித்த ஆட்டமிழக்காத அரைச் சதங்கள் என்பன இந்தியாவுக்கு இலகுவான வெற்றியை ஈட்டிக்கொடுத்தன.

அணித் தலைவர் ரோஹித் ஷர்மா ஓட்டம் பெறாமல் 3ஆவது ஓவரிலும் விராட் கோலி 3 ஓட்டங்களுடன் 7ஆவது ஓவரிலும் ஆட்டமிழக்க இந்தியாவின் மொத்த எண்ணிக்கை 17 ஓட்டங்களாக இருந்தது. ஆனால், கே. எல். ராகுல், சூரியகுமார் ஆகிய இருவரும்



திறமையாகத் துடுப்பெடுத்தாடி அரைச் சதங்கள் குவித்தனர். அத்துடன், 3ஆவது விக்கெட்டுக்காக 63 பந்துகளில் 93 ஓட்டங்களைப் பகிர்ந்து இந்தியாவின் வெற்றியை சுலபமாக்கினர்.

கே. எல். ராகுல் 56 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகள் அடங்கலாக 51 ஓட்டங்களுடனும் சூரியகுமார் யாதவ் 33 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 50 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

அந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தென்னாபிரிக்கா 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய ஆரம்ப பந்துவீச்சாளர்களை எதிர்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்ட தென்னாபிரிக்கா 15 பந்துகளில் 5 விக்கெட்களை இழந்து வெறும் 9 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது.

தீபக் சஹார், அர்ஷ்தீப் சிங் ஆகிய இருவரும் துல்லியமாக பந்துவீசி ஐவரை ஆட்டமிழக்கச் செய்தனர்.

அணித் தலைவர் தம்பா பவுமா (0), குயின்ரன் டி கொக் (1), ரைலி ருசோவ் (0), டேவிட் மில்லர் (0), ட்ரைஸ்டன் ஸ்டப்ஸ் (0) ஆகிய ஐவரும் 3 ஓவர்கள் நிறைவு பெறுவதற்கு முன்னரே களம் விட்டகன்று சென்றனர். அவர்களில் கடைசி மூவரும் தாங்கள் எதிர்கொண்ட முதல் பந்திலேயே ஆட்டமிழந்தனர்.

எவ்வாறாயினும் அய்டன் மார்க்ரம் (25), வெய்ன் பர்னல் (24), கேஷவ் மஹாராஜ் (41) ஆகிய மூவரும் பொறுப்புணர்வுடன் துடுப்பெடுத்தாடி தென்னாபிரக்காவை ஓரளவு கௌரவமான நிலையில் இட்டனர்.

இந்திய பந்துவீச்சில் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்களையும் தீபக் சஹார், ஹர்ஷல் பட்டேல் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.



## உலகக் கிண்ணத் தொடர் இந்தியாவின் பும்ரா விலகல்!

புதுடில்லி, செப். 30

இந்திய அணி வீரர் ஜஸ்பிரீத் பும்ரா காயம் காரணமாக இருபது - 20 உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டியிலிருந்து விலகுகிறார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக 4 முதல் 6 மாதங்கள் வரை பும்ராவால் விளையாட முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய அணி தற்போது தென்னாபிரிக்க அணியுடனான 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றுள்ளது. முதல் போட்டியில் இந்திய அணி வென்றது. எனினும், இந்தப் போட்டியில் பும்ரா விளையாடவில்லை.

இந்த சூழ்நிலையில், இந்திய அணி உலகக் கிண்ணத் தொடருக்காக வரும் 6ஆம் திகதி அவுஸ்திரேலியா புறப்படுகிறது. இந்த சமயத்தில் பும்ரா விவகாரத்தில் இருபது -20 உலகக் கிண்ணத் யில் பங்கேற்பாரா என ரசிகர்கள் மத்தியில் கேள்வி எழுந்தது.

முதுகுவலி காரணமாக அவர் உலகக் கிண்ணத்திலிருந்து விலகியுள்ளார் என்று கூறப்படுகிறது. இது இந்திய ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனினும், பும்ரா விளையாடவில்லை என்பது உரிய தரப்புகளால் உறுதி செய்யப்படவில்லை. (ஐ)

## வெற்றியில் மெஸ்ஸி சதம்!

நியூ ஜெர்சி, செப். 30

ஜமைக்காவுக்கு எதிரான நட்பு உதைபந்தாட்ட போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா வென்றது. இதில் 2 கோல்கள் அடித்த அணியின் தலைவர் மெஸ்ஸிக்கு 100ஆவது சர்வதேச வெற்றியாகவும் அமைந்தது.

கட்டாரில் நடைபெறவுள்ள பிபா உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிக்கு தயாராகும் வகையில் பல்வேறு நாடுகள் நட்பு போட்டிகளில் ஆடி வருகின்றன. நியூ ஜெர்ஸியில் செவ்வாய்க்கிழமை இரவு ஜமைக்காவுடன் நடைபெற்ற ஆட்டத்தில் முன்னாள் உலக சம்பியன் ஆர்ஜென்ரீனா மோதியது.

முதலில் 56ஆவது நிமிடத்தில் லாட்ரோ மார்ட்டினஸ் முதல் கோலை அடித்தார். பின்னர் 86-ஆவது நிமித்தில் மெஸ்ஸி தனது முதல் கோலை அடித்தார். தொடர்ந்து ப்ரீ கிக் வாய்ப்பின் மூலம் இரண்டாவது மற்றும் வெற்றி கோலை அடித்தார் மெஸ்ஸி.

ஆர்ஜென்ரீன அணியின் தலைவர் மெஸ்ஸிக்கு இது 100ஆவது சர்வதேச வெற்றியாக அமைந்தது. கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஹொண்டூரஸ் அணிக்கு எதிரான நட்பு ஆட்டத்திலும் மெஸ்ஸி 2 கோல்களை அடித்திருந்தார்.

164 போட்டிகளில் மெஸ்ஸி அடித்த 90ஆவது கோலாகும். 13ஆவது முறையாக நேரடியாக உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற்றுள்ள ஆர்ஜென்ரீனா அணி கட்டாரில் பட்டம் வெல்லும் அணிகளில் முக்கியமாக கருதப்படுகிறது.



# யாழில் ஹெரோய்னுக்கு அடிமையானவர்கள் தாங்களாவே சிகிச்சைக்கு வருவது அதிகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 30

**யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் போன்ற போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் தாங்களாக சிகிச்சைக்கு முன்வருவது கடந்த அண்மைய நாள்களாக அதிகரித்துள்ளது.**

அவர்களுக்கான புனர்வாழ்வு விடுதி வசதிகள் யாழ்ப்பாணம் மாவட்ட மருத்துவமனைகளில் இல்லாத நிலையில், அவர்களுக்கு உளவள ஆலோசனைகளும், மருத்துவ வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன என்று மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன் பாவனையும், ஏனைய போதைப்பொருள்களின் பாவனையும் வெகுவாக அதிகரித்துள்ளன.

ஹெரோய்ன் போதைப்பொருள் பாவனையால் இளைஞர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், சமூகப் பிறழ்வான சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

இந்தநிலையில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் தாமாக சிகிச்சைக்கு முன்வருவது அண்மைய நாள்களாக அதிகரித்துள்ளது என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனைக்கு உள்ளானவர்களைத் தங்க வைத்து சிகிச்சையளிக்கக்கூடிய வசதிகள் மருத்துவமனைகளில் இல்லை. சாவகச்சேரி மருத்துவமனையில் மதுப் பாவனைக்கு அடிமையானவர்களைத் தங்க வைத்துச் சிகிச்சையளிக்கக் கூடிய வசதிகள் உள்ளபோதும், ஹெரோய்ன் போன்ற போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்களைத் தங்க வைத்துச் சிகிச்சையளிக்கக் கூடிய விடுதி வசதிகள் இல்லை.

கந்தகாடு, வெலிகந்தை போன்ற போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு முகாம்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழேயே செயற்படுகின்றன. அவ்வாறான புனர்வாழ்வு முகாம்களும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இல்லை.

இதனால்,தற்போது சிகிச்சைக்கு வரும் ஹெரோய்ன் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு உளநல ஆலோசனைகளும், மருத்துவ வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு , வீடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

உளநல ஆலோசனைகள் தனியாக, குழுவாக, குடும்ப உறுப்பினர்கள் எனப் பல்வேறு வழிமுறைகளில் பல்வேறு கட்டங்களாக வழங் கப்படுகின்றன என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் தாங்களாக சிகிச்சை பெற முன்வரும் நிலையில், அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கக்கூடிய நிலையம் ஒன்றை உருவாக்குவது கூடிய பயனைத் தரும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (அ)

## கொரோனா தர வரிசையில் 80ஆவது இடத்தில் இலங்கை!

கொழும்பு, செப். 30

உலகளவில் கொரோனா தரவரிசைப் பட்டியலில் இலங்கை 80 ஆவது இடத்தை பிடித்துள்ளது. இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் 17 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய் யப்பட்டுள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்க 6 இலட்சத்து 70 ஆயிரத்து 749 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 6 இலட்சத்து 53 ஆயிரத்து 776 பேர் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளனர்.

இதேநேரம், இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் கொரோனா வைரஸ் தொற்றினால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, உயிரிழப்புகளின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 759 ஆக பதிவாகியுள்ளது.எவ்வாறிருப்பினும் நாட்டில் நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்கள் மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை குறைந்து வருவதால் உலகளவில் கொரோனா தரவரிசைப் பட்டியலில் இலங்கை 80 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. (அ)

## பயங்கரவாத சட்டத்தை நீக்கினால் மட்டுமே நாட்டில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும்!

### கையெழுத்து வேட்டை நிகழ்வில் முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன்

அம்பாறை, செப். 30

“இலங்கையில் இன்று மூவின மக்களுக்கும் எதிராக பாய்ந்திருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கினால் மாத்திரமே இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாக்கப்படும்.”

-இவ்வாறு அம்பாறை மத்திய முகாமில் நடைபெற்ற பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து வேட்டையில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த பயங்கரவாத தடைச் சட்டம் அன்று தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக இலங்கை அரசினால் அராஜகமாக கொண்டுவரப்பட்டது. இன்று அதே சட்டம் ஏனைய முஸ்லிம் சிங்கள மக்கள் மீதும் பாய்கின்றது. இந்த சட்டத்தினால் மனித உரிமை மீறப்பட்டிருக்கின்றது இனப் படுகொலை இடம் பெற்றிருக்கின்றது என்பதை யாரும் மறுக்க முடியாது.

எனவேதான் இப்படிப்பட்ட கொடுமை யான சட்டத்தை நீக்கும்படி கோரி இந்த கையெழுத்து வேட்டையை நாம் ஆரம்பித்து இருக்கின்றோம்.

இந்த பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கினால் மாத்திரமே இலங்கையில் மனித உரிமை பாதுகாக்கப்படும் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த வேட்டையில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்-என்றார். (அ)

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தமிழர் வாழ்வியலை சீரழித்தது!

### காரைதீவு தவிசாளர் ஜெயசிறில் சுட்டிக்காட்டு

அம்பாறை, செப். 30

“இலங்கையில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் ஈழத் தமிழ் மக்களின் வாழ்வியலை முற்றாக சீரழித்தது. இலட்சக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறையில் வாட காரணமாக இருந்தது. இன்று அச் சட்டம் மூவின மக்கள் மீதும் பாய்ந்திருப்பது விசித்திரமானது அல்ல.”

-இவ்வாறு அம்பாறை மத்திய முகாம் பகுதியில் தமிழரசுக் கட்சியால் மேற் கொள்ளப்பட்ட கையெழுத்து வேட்டை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

தமிழ்பேசும் மக்களின் குரலாக ஒலிக்கின்ற தமிழரசுக் கட்சியானது 25 மாவட்டங்களிலும் இந்த கையெழுத்து வேட்டையை நடத்தி வருகின்றது. 1979 ஆம் ஆண்டு தொடக்கம் இந்தச் சட்டத்தினால் தமிழ் இளைஞர்கள் தமிழினம் பல்வேறு அடக்கு முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்தது. இதனால் வடகிழக்கு தாயக மண்ணிலே எமது தமிழ் மக்கள் சொல்லொணா துயரத்தில் தள்ளப்பட்டார்கள்.வாழ்வியல் சின்னாபின்னமாகியது.

அன்று தமிழ் மக்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட இந்த பயங்கரவாததடை சட்டம் இன்று முஸ்லிம் இளைஞர்கள் நாட்டில் இருந்த அராஜக அரசியலை விரட்டி அடித்த அறகல போராட்டக்காரர்கள் மீதும் பாய்ந்து இருக்கின்றது.

அதற்காகத்தான் மூவின மக்களும் சேர்ந்து இப் பொல்லாத சட்டத்தை நீக்கும்படி கோரி இந்த கையெழுத்து வேட்டையை நாடுபூராக நடாத்தி வருகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய மக்களை வேதனைப்படுத்தி தமிழ் மக்களுக்கு சுதந்திரம்வேண்டும் என்று ஒருபோதும் கேட்கவில்லை .

ஏனைய மக்கள் அனுபவிக்கின்ற உரிமை சுதந்திரம் போன்றவற்றை எமது தமிழ் மக்களுக்கும் தாருங்கள் என்றுதான் கேட்கின்றோம். இல்லாததை கேட்கவில்லை. நாம் எமது உரிமைகளைத்தான் கேட்கின்றோம்.

நாம் எந்த இனத்திற்கும் எதிரானவர்கள் அல்லர்.

எமது பயணம் தேச விடுதலைக்காகவும் மக்களுக்காகவும் தொடர்ச்சியாக நடைபெறும்-என்றார். (அ)

## கிராம அலுவலர் கைது

கொழும்பு, செப். 30

அனுமதிப்பத்திரமின்றி மரம் வெட்டுவதற்காக நபரொருவரிடம் 10,000 ரூபாவை இலஞ்சமாக பெற்றுக்கொண்ட கிராம உத்தியோ கத்தரொருவரை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் நொச்சியாகம பகுதியில் வைத்து கைது செய்துள்ளனர்.

நொச்சியாகம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 333 குசும்புர கிராம உத்தியோகத்தர் பிரிவில் கடமை செய்து வந்த கிராம உத்தி யோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரான கிராம உத்தியோகத்தர் நொச்சியாகம நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

## யுத்த...

அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் ராஜா கிருஸ்ணமூர்த்தி, ஹாங்ஜோன்சன் உட்பட 8 காங்கிரஸ் உறுப்பினர்கள் அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளனர்.

குற்றவாளிகளை பொறுப்புக்கூறச் செய்தல் இலங்கையின் உள்நாட்டு யுத்ததின் மனித குலத்திற்கு எதிரான குற்றம் யுத்த குற்றங்கள் ஆகியவற்றிற்காக சர்வதேச நீதி பொறிமுறையை உருவாக்குவது குறித்து அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் விளங்கவேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில்,

இலங்கையின் உள்நாட்டு மோதலின்போது யுத்த குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என குற்றம்சாட்டப்படும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவரின் குடும்பத்தினர் உட்பட அனைவரையும் விசாரணை செய்து பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமாறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளருடன் இணைந்து செயல்படுமாறும் நாங்கள் உங்களை கேட்டுக் கொள்கின்றோம்.

இலங்கையில் மனித உரிமைகள் மீறல்கள் துஸ்பிரயோகங்களுக்குக் காரணமானவர்கள் எனக் குற்றம்சாட்டப்படுபவர்களை பொறுப்புக்கூறச் செய்வதற்கு தடைகள் உட்பட இராஜதந்திர சாதனங்களை பயன்படுத்தவேண்டும் எனவும் நாம் உங்களை கேட்டுக்கொள்கிறோம்.

2009 இல் முடிவடைந்த இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ் புலிகளிற்கும் எதிரான 27 வருட கால போரில்ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர் - காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

13 வருடங்களுக்கு பின்னர் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தில் இழைக்கப்பட்ட மனித உரிமைகள் மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் இன்னமும் நீதிக்காக காத்திருக்கின்றனர் என சமீபத்தைய செப்ரெம்பர் 22 - ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை தெரிவிக்கின்றது.

2020 ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் சுட்டிக்காட்டியதுபோல கடந்த கால குற்றங்களுக்கு தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிப்பதற்கு இலங்கை இன்னமும் தீர்வை காணவில்லை என்றஅடிப்படை பிரச்சினை இன்னமும் நீடிக்கின்றது. இதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் நீதி மறுக்கப்பட்ட நிலையில் உள்ளனர். அனைத்து சமூகத்தினரும் கடந்த கால மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறாது என்ற உறுதியற்று காணப்படுகின்றனர் என குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் கடந்த கால யுத்த குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலுக்கான வேண்டுகோளை விடுப்பதில் அமெரிக்கா முக்கியமான நாடாக காணப்படுகின்றது, 2015 இல் இலங்கை இணை அனுசரணை வழங்கிய தீர்மானம் ஒன்றை மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளில் அமெரிக்கா முன்னிலையில் காணப்பட்டது.

2021 இல் யுத்த குற்ற ஆதாரங்களை சேகரிப்பது நீதியை கண்டறிவது குறித்து ஆலோசனை வழங்குவது ஆகியவற்றை கோரிய தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ஏற்றுக்கொள்வதில் அமெரிக்கா முக்கிய பங்களிப்பை வழங்கியது.

எனினும் 2019 இல் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் இலங்கையின் உறுதிமொழிகளில் இருந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பின்வாங்கினார். அவர் பதவியிலிருந்து விலகிய பின்னர் இலங்கை அரசாங்கம் உறுதியான நிலைமாற்று நீதி செயல்பாட்டை முன்வைக்கவில்லை.

குற்றவாளிகளை பொறுப்புக்கூறச் செய்தல் இலங்கையின் உள்நாட்டு யுத்ததின் மனித குலத்துக்கு எதிரான குற்றம் யுத்த குற்றங்கள் ஆகியவற்றுக்காக சர்வதேச நீதி பொறிமுறையை உருவாக்குவது குறித்து அமெரிக்கா அர்ப்பணிப்புடன் விளங்கவேண்டும். இலங்கையின் மூன்று அதிகாரிகளுக்கு எதிராக தடைகளை விதித்தமைக்காக நாம் உங்களை பாராட்டுகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## அரசைக்...

பின்னர் பாராளுமன்றத்தை ஆக்கிரமிக்குமாறும் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பை தடுக்குமாறும் போராட்டக்காரர்கள் தூண்டப்பட்டனர். இதன் பின்னால் சில அரசியல்வாதிகள் இருந்தனர். இது தொடர்பிலேயே பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆட்சிக் கவிழ்ப்பு தொடர்பில் இந்த அரசியல்வாதிகள் சில தரப்பினருடன் பேச்சுக்களில் ஈடுபட்டனர் அது தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் மீளப்பெறலாம் என்ற தகவல்களுக்கு மத்தியில் உயர் பாதுகாப்பு வலயங்கள் ஏன் அவசியம்? ஏன் அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து உயர் நீதிமன்றத்துக்கு அரசாங்கம் தெளிவுபடுத்தவுள்ளது. (ஐ)

## தேசிய பேரவை...

பட்டது.

மேலும், உருவாக்கப்பட்ட உப குழுக்கள் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசிய கொள்கைகளை வகுப்பதற்கான வழிகாட்டுதல்கள் தொடர்பாக பாராளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளைத் தீர்மானித்தல், பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய மற்றும் மத்திய கால நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்குவதல் தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், சகல பாராளுமன்ற அமர்வு வாரத்திலும் வியாழக்கிழமைகளில் தேசிய பேரவையை கூட்டுவது என்று முடிவு எட்டப்பட்டது. (ஐ)

## பயங்கரவாத...

செய்தது.

விவாதங்களை அடுத்து பொதுநலன் தொடர்பான விடயம் என்ற அடிப்படையில் மூன்று நீதிபதிகளை கொண்ட நீதிமன்றம் இந்த மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

மனு தொடர்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், நீதிமன்றத்தின் சட்ட வரம்புகளை பூர்த்தி செய்யவில்லை என்று நீதிபதிகள் தமது நிராகரிப்புக்கு காரணம் காட்டினர். (ஐ)

## கண்காணிப்பு...

கிரியெல்ல பங்கேற்றிருந்தார்.

இதன்போதே, பாராளுமன்ற நிலையியல் கட்டளையின் பிரகாரம் நிதிக் குழுவின் முக்கிய பதவிகளுக்கு எதிர்க் கட்சியினர் நியமிக்கப்பட வேண்டும்.

2002ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது மறைந்த ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கோப் குழுவுக்கு நியமிக்கப்பட்டார். நல்லாட்சி அரசாங்கத்தின்போது கோப் குழுவின் தலைமை பதவி ஜே. வி. பிக்கு வழங்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகளிலும் முக்கிய பதிவிகள் எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்படுகின்றன - என்றும் சுட்டிக்காட்டினார். (ஐ)

## போதைப்...

யாழ். போதனா மருத்துவமனையினர் நேற்று போதைப்பொருளை ஒழிக்கக் கோரியும் விழிப்புணர்வுக்காகவும் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

யாழ். போதனா மருத்துவமனையில் ஆரம்பமான இந்தப் பேரணி யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபருக்கு மனு கையளிப்பதில் நிறைவடைந்தது.

கையளிக்கப்பட மனுவில்,

“நாட்டின் பொருளாதாரம் சிதைக்கப்படுகிறது. பொதுமக்களும் போதனா மருத்துவமனை சமூகத்தினர் ஆகிய நாமும் போதைப்பொருள் விநியோகஸ்தர்கள் மீதான கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படாமை குறித்து ஏமாற்றமும், அதிர்ச்சியும் அடைகின்றோம். இளம் சந்ததியினரையும் நாட்டையும் காப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தங்களை வலியுறுத்துகின்றோம்.

போதைப்பொருள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முப்படைகளையும் உடனடியாக வலியுறுத்துதல், போதைப் பொருள் விநியோகம் தொடர்பான தகவல்களை வழங்கு வோரை பாதுகாப்பதற்கான பொறி முறையை உருவாக்குதல், போதைப்பொருள் சம்பந்தமான தகவல்களை தயக்கமின்றி வழங்க அதிபர்கள் ஆசிரியர்களை ஊக்கப்படுத்துதலும், அவர்களைப் பாதுகாத்தலும்.

போதைப் பொருள் பாவனைக்கு எதிரான மக்கள் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து பொலிஸாருடன் இணைந்து போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு உதவியளித்தலும், ஊக்கப்படுத்துதலும், போதைக்கு அடிமையானவர் களுக்கு மறுவாழ்வளிப்பதற்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்குவதும், அதன் தொடர்ச்சியான செயற்பாடு களை உறுதிப்படுத்தலும் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. (ஐ)

## இலங்கைக்கு...

கான சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் பீற்றர் ப்ரூவர் மற்றும் இலங்கை தலைவர் மசாஹிரோ நோசாகி ஆகியோர் நிக்கி ஏஷியா இணையத்தளத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் இலங்கைக்கான கடன் தொடர்பில் விளக்கமளித்துள்ளனர்.

அதில், ‘கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களுக்கு நேரம் எடுப்பதால், நிதியை வழங்கும் காலக்கெடுவை எதிர்வுகூறுவது மிகவும் கடினம். சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச்சுக்களை விரைவுபடுத்த வேண்டும். அப்போதுதான், எதிர்கொள்ளும் நெருக்கடியிலிருந்து இலங்கை விரைவாக வெளியேற முடியும்.

நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியின் தரவுகளுக்கமைய சீனா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகியவை இலங்கையின் முதன்மையான இரு தரப்பு கடன் வழங்குநர்களாக உள்ளனர். இலங்கையின் மொத்தக்ஷ கடனில் சீனா 52வீதம், ஜப்பான் 19.5வீதம் மற்றும் இந்தியா 12வீதம் என்ற அளவில் வழங்கியுள்ளன - என்று கூறியுள்ளனர். (ஐ)

## தொடர்புகளைத்...

ளன. தொலைபேசி எண்ணை மாற்றியுள்ள அவர் அமெரிக்காவில் தனியாக வசித்து வருகிறார். இதனால், அவருக்கு மிகநெருக்கமானவர்கள், அவரின் சகோதரர்கள்கூட பஸிலை தொடர்புகொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த மே 9 வன்முறையை தொடர்ந்து ஏற்பட்ட போராட்டங்களால் ராஜபக்ஷவினர் பதவிகளை துறந்தனர். இந்நிலையில், ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுள்ள நிலையில், ராஜபக்ஷ குடும்பத்திலும் பொதுஜன பெரமுனவிலும் சில நெருக்கடிகள் உருவாகின.

பொதுஜன பெரமுன உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக பஸில் ராஜபக்ஷ கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. தற்போதைய அமைச்சரவையில் பெரும்பான்மையானவர்கள் பஸில் ராஜபக்ஷவுக்கு நெருக்கமானவர்கள் அல்ல. அமெரிக்கா செல்வதற்கு முன், பஸிலுக்கு மிக நெருக்கமான குழுவை அமைச்சரவையில் சேர்க்க அவர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

இந்நிலையில் குறிப்பிட்ட காலத்துக்கு அரசியல் நடவடிக்கைகளில் இருந்து விலகி இருக்க பஸில் ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார். எப்படியிருப்பினும் அவரால் நீண்ட காலம் அப்படி இருக்க முடியாது. ராஜபக்ச குடும்பமும், பொதுஜன பெரமுனவும் மீண்டும் எழுச்சி பெற வேண்டுமாயின் பஸிலின் தலையீடு கட்டாயமானது என்று அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## கட்டுப்பாடுகளை...

தயாராக இருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் தலைமையகத்தில் நேற்று கண்காணிப்பில் ஈடுபட்டபோதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யலாம் அல்லது அத்தியாவசியமானவை அல்ல என்ற அடிப்படையில் குறித்த பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## போராடுவோரை...

இந்த சட்டமூலம் ஊடாக போராட்ட செயல்பாட்டாளர்களை புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பி, நீண்டகாலம் தடுத்து வைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கடந்த 23ஆம் திகதி புனர்வாழ்வு பணியகத்தை நிறுவுவதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

வழி தவறிய போராட்டக்காரர்கள், அடிப்படைவாதிகள், நாசகார செயலில் ஈடுபடுவோர் அல்லது போதை மருந்துகளுக்கு அடிமையானோருக்கான புனர்வாழ்வு செயல்பாட்டை திறம்பட செய்வதற்காக இந்த பணியகம் நிறுவப்பட்டுள்ளது.

பணியகத்தின் செயல்பாடுகள், நிர்வாகம், முகாமைத்துவம் என்பவற்றுக்கு சபை ஒன்றை நிறுவி பாதுகாப்புக் கல்வி, சுகாதாரம் , புனர்வாழ்வு உள்ளிட்ட துறைசார் அமைச்சுகளின் செயலாளர்கள் அதற்கென நியமிக்கப்படவுள்ளனர்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் அல்லது பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் அதில் உள்ளடக்கப்படவுள்ளனர்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு அமைய விமானப்படை, கடற்படை, இராணுவத்தின் உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கும் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புனர்வாழ்வு பணியக சட்டமூலம் நாட்டை இராணுவமயப்படுத்துவதற்கு வழிவகுக்கும் அரசமைப்புக்கு முரணான சட்டமூலம் என தீர்ப்பளிக்குமாறு கோரி சட்டத்தரணி அமில எகொடமஹவத்த உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

ஈழநாடு
Eelanadu

# தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளுடன் தீர்வு தொடர்பில் விரைவில் பேச்சு!

## பிரதமர் தினேஷ் குணவர்தன தகவல்

கொழும்பு, செப். 30

**"தேசிய பிரச்னைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு விரைவில் பேச்சை ஆரம்பிக்கும்" - என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

தேசிய பிரச்னைகள் தொடர ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று தெரிவித்த தினேஷ் குணவர்த்தன, குறுகிய காலத்துக்குள் இந்தப் பிரச்னைகளுக்குள் உரிய தீர்வுகளைக் காண வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய பிரச்னைகள் நீடித்தால் இன, மத நல்லிணக்கம் ஏற்படாது. நாட்டில் ஏதோவொரு வகையில் இன ரீதியிலும், மத ரீதியிலும் கருத்து மோதல்கள் உருவாகின்றன.



இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடத்தில் பிளவுகளை ஏற்படுத்திக் குளிர்காய சிலர் முற்படுகின்றனர். தீர்வு விடயம் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதி நிதிகளுடன் அரசாங்கம் விரைவில் பேச்சை ஆரம்பிக்கவுள்ளது-என்றார். (அ)

## விசேட தேவையுடையோருக்கு உலருணவுப் பொருள் வழங்கல்

அம்பாறை, செப். 30

சாய்ந்தமருது அல்-சுபைதா அமைப்பின் முயற்சியின் பேரில் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரினால் வழங்கப்பட்ட உணவுப் பொருட்களை 45 விசேட தேவையுடையோருக்கு பகிர்ந்தளிக்கும் வைபவம் மாளிகைக்காடு அல்-ஹூசைன் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் செயலாளர் ஏ.எம் ஜஹான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அல்- சுபைதா அமைப்பினுடைய பிரதான ஆலோசகரும், முன்னாள் பிரதேச செயலாளரும், அரச பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினருமான ஏ.எல்.எம் சலீம் கலந்து கொண்டதுடன் அமைப்பினுடைய ஏனைய உறுப்பினர்களின் பங்களிப்பில் குறித்த பொருட்கள் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அதிகாலை அரிசி ஆலைக்குள் நுழைந்தது காட்டு யானை!

அம்பாறை, செப். 30

அம்பாறை-சம்மாந்துறை பிரதேசத்தில் நாளாந்தம் காட்டு யானைகளின் தொல்லைகள் காணப்படுகின்றன. இதனால், பொது மக்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலையும் சம்மாந்துறை நெற்புட்டிச் சந்திக்கு அருகாமையில் உள்ள அரிசி ஆலைகளை காட்டு யானை ஒன்று சேதப்படுத்தியுள்ளது.

மூன்று அரிசி ஆலைகளில் உள்ள மதில் சுவர்கள், நெல் களஞ்சிய அறைகள், முன் வாயிற் கதவு ஆகியவற்றை சேதப்படுத்தியுள்ளது. அத்தோடு அங்குள்ள நெல் மூடைகளையும் சேதப்படுத்தியுள்ளன. மேலும் பயன்தரும் வாழை மரங்களையும் சேதப்படுத்தியுள்ளது.

சம்மாந்துறை பிரதேசத்திற்குள் நாளாந்தம் காட்டு யானைகள் இரவு வேளைகளில் நுளைந்து சேதங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இதனால், மக்கள் அச்சமடைந்தவர்களாக உள்ளனர். அதனால், காட்டு யானைகளின் வருகையை கட்டுப்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று பொதுமக்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, நேற்று காலை 09.30 மணியளவில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் கேட்போர் மண்டபத்தில் யானை மற்றும் மனித மோதலை குறைப்பது தொடர்பான வழிகாட்டல் கூட்டமொன்று இடம்பெற்றது.

இதில் விவசாயிகள், பொது மக்கள், கிராம சேவகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் சம்மாந்துறை பிரதேச வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரி ரீ.ஜெயதீஸனும் கலந்து கொண்டு கருத்துக்களை முன் வைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)






## யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியில் புதிய கட்டடத் தொகுதி திறப்பு

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியில் புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதி நேற்று வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

அண்மையிலுள்ள சிறந்த பாடசாலை எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதியை நேற்று கடற்றொழில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்தார்.

இதன்போது பாடசாலை அதிபர் வாசுகி தவபாலன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இரா.வரதீஸ்வரன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)



## மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நவராத்திரி பூஜை சிறப்பு வழிபாடு!

### சுப்பிரமணியன் சுவாமி பங்கேற்றார்

கொழும்பு, செப். 30

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், நவராத்திரி பூஜை சிறப்பு வழிபாடு நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

இச்சிறப்பு வழிபாட்டில், இந்திய அமைச்சரவை முன்னாள் அமைச்சரும் இராஜ்யசபாவின் முன்னாள் உறுப்பினருமான கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். (அ)

## இலங்கை-பிலிப்பைன்ஸ் உறவை மேலும் வலுப்படுத்த நடவடிக்கை!

### இரு நாட்டுத் தலைவர்களும் சந்திப்பு

கொழும்பு, செப். 30

ஆசிய பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இலங்கைக்கும் பிலிப்பைன்ஸிற்கும் இடையிலுள்ள நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்த முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு பிலிப்பைன்ஸ் சென்றுள்ள ஜனாதிபதி, அந்நாட்டு ஜனாதிபதி பேர்டினனட் ஆர். மார்க்கஸ்ஸை நேற்றுக் காலை மணிலாவில் சந்தித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மணிலாவில் உள்ள மலாக்கனங் மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மகத்தான வரவேற்பு அளித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களும் தமது நட்புடன் கூடிய உரையாடலைத் தொடர்ந்து இரு தரப்பு கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

இச்சந்திப்பின்போது இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையில் உள்ள நீண்ட கால இருதரப்பு நட்புறவை புதிய அணுகு முறைகள் மூலம் மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன, பிலிப்பைன்ஸ்கான இலங்கைத் தூதுவர் ஷோபினி குணசேகர ஆகியோருடன் இலங்கையிலிருந்து சென்ற பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.